ஸம்புடம் 11
ஸஞ்சிகை 12

ஸ்ரீ:

நந்தன ௵
மார்கழி ௴

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸ்ரீ அழகியசிங்கர் நியமநத்தால்
மாதந்தோறும் ப்ரசுரமாகும்
ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை

DONATED BY
Chakravarthi Srinivasa Chariar's
132, BIG STREET,
KUMBAKONAM.

यस्याभवद्भक्तजनार्तिहन्तुः पितृत्वमन्येष्वविचार्य तूर्णम् ।
स्तम्भेऽवतारस्तमनन्यलभ्यं लक्ष्मीनृसिंहं शरणं प्रपद्ये ॥

ஸம்பாதகர்

P. S. ஸ்ரீநிவாஸ தேசிகாசாரியர், M. A., B. L. சிரோமணி
(அட்வொகேட்)

தனிப்ரதி விலை 0—4—0

வர்ஷச்சந்தா
ரூபாய் 3—0—0

DECEMBER 1952
VOL 11 NO 12.

விஷய ஸூசிகை

விஷயம்		பக்கம்
1. ஸ்ரீஸங்கல்பஸூர்யோதயம் [ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M. A., B. L. அட்வோகேட், திருச்சி.]	...	314
2. ஆசார்யதேவோ பவ [ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தாநவித்வான், தேசிகதர்சநவிஜயத்வஜ, புத்தங்கோட்டகம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்.]	...	317
3. நந்தநோத்ஸவ நினைவுகள் [ஸ்ரீ. உப. தி. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, அட்வோகேட், சென்னை.]	...	321
4. த்ருவசரித்ரம் [ஸ்ரீ. உப. ஓரகடம் K. ஸுதர்சநாசார்யஸ்வாமி, ரிடையர்ட் தமிழாசிரியர், அவுளூர்.]	...	325
5. இயேஷபதப்ரயோஜநம் [ஸ்ரீ. உப. வித்வான், வேளியநல்லூர், ஸ்ரீநிவாஸதாதாசார்ய ஸ்வாமி, காஞ்சீபுரம்.]	...	328
6. ஆழ்வார் ஆசார்யர்களின் அவதாரம் [ஸ்ரீ. உப. பவுண்டரீகபுரம் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, காஞ்சீபுரம்.]	...	330
7. தேசிகவைபவநாடகத் தமிழ்க்கவி [ஸ்ரீ. உப. பந்தல்குடி ரே. திருமலை ஐயங்கார் ஸ்வாமி, தமிழ் வித்துவான், கார்யதர்சி, திருவல்லிக்கேணி தமிழ்ச்சங்கம், அம்பத்தூர்.]	...	334
8. செய்திகள்	...	337

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 11 } **நந்தன ௵ மார்கழி ௴** { **ஸஞ்சிகை 12**

'அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பிதஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா |
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||
ந்ருஸிம்ஹபக்தலோகாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீ ஸங்கல்பஸூர்யோதயம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

‘ஸ தபஸ்தப்த்வா மிதுநமுத்பாதயதே ரயிஞ்ச ப்ராணஞ்ச’ ப்ரஜாபதியாகிய பரமாத்மா எப்படி ஒரு மிதுனத்தை ஸ்ருஷ்டித்தார் என்று அங்கேயுள்ளது. ஜோடியாகவே பிறந்த ‘ஸ்த்ரீபும்மிதுநம்’ ‘ப்ரக்ருதிபுருஷாவஹம் மிதுநம்’ என்று உபநிஷத் பாஷ்யம். ‘ராக்ஷஸீமாஸுரீம் சைவ ப்ரக்ருதிம் மோஹிநீம் ஸ்ரிதா:’ என்று பகவான் ப்ரக்ருதியை ‘மோஹிநீ’ என்றும், அது ‘ராக்ஷஸீ’ என்றும் ‘ஆஸுரீ’ என்றும், அவளை விவேகமில்லாதவர்கள் வீண் ஆசைகளால் அலைந்து வீண் செய்கைகளிலும் வீண் அநுபவங்களிலும் விழுந்துழலுகிறார்கள், எல்லாம் அவமே மோகமே எனக் கூறினர். அவருடைய குணமயியான மாயை அவள். இந்த மாயப்பேய்ப் பெண்ணோடு செய்த உச்சாவசமான க்ரீடைகளால் மிகவும் சோர்ந்துபோன தேஹத்தை சுமந்துகொண்டிருக்கும்ஜீவனை அநாதிகாலமாய் மாயாராத்ரியில் இம்மாயைப்பெண்ணோடு கூத்தாடிச்சோர்ந்தவனை. வஸிஷ்டாணொஷ்ராம ப்ரவணகருணாவஶவிவஶ:-இவனை இந்தப் பேயின் கட்டிலிருந்து விடுவித்து ரக்ஷிக்க வேணுமென்ற இரக்கத்திற்கு வசமாகி ராக்ஷஸப்ரக்ருதிப் பெண்ணினாவேசத்தால் ஜீவன் விவசனாய்த் திண்டாடினான். இவன் திண்டாட்டத்தைக் கண்டு பகவானுக்குப் பொறுக்கமாட்டாமல் இவனை ரக்ஷிப்பதில் மனமிரங்கி தேவத்தன்மையான தயாதேவியினாவேசத்தால் விவசரானார். ‘ப்ரதிக்ஷேப்தும் தாவாந்’ இவனுடைய கோரதாபங்களை உடனே அகற்ற வேணுமென்று ப்ரபுவின் திருவுள்ளம் கனிந்தது. ப்ரஶமயிதுமலம் தேஹிநாம் – அந்த தாபங்களையெல்லாம் விரைவில் போக்க பகவான்தான் ஸமர்த்தரான ப்ரபு. அவருடைய தயாளுத்தன்மையின் மஹிமைக்கு எல்லையேயில்லை. அவர் மாயை மற்ற யாவர்க்கும் துரத்யயம், ஜயிக்கமுடியாது. யாதொரு ஸாதநமில்லாமல் நிஷ்காரணமாக நிர்நிமித்தமாகப் போக்குகிறாரோ? இல்லை. ‘மாமேவ யெ ப்ரபத்யந்தெ’ என்றபடி தன்னைப் ப்ரபதநம் செய்கிறான்–தன் திருவடிகளில் வணங்குகிறான்–என்ற ஓர் ஹேதுவைக்கொண்டு வினைகளையெல்லாம் போக்கி மாயையை மங்கவொட்டுகிறார். பாபதாபஜ்வரங்களைத் தணித்தார். ஜ்வரம் மண்டியெரிந்தால் பனிக்கட்டி (ஹிமானீ)யை வைத்துத் தணிப்பர். இங்கே பாதப்ரணாமமும் பாதமும் ஸகலதாபங்களையும் தணிக்கும் பனிக்கட்டி. இவனாக ஸ்வதந்த்ரனாய்த் தானே இந்த ஸாதநத்தை யநுஷ்டிக்கிறானே? இதுவுமில்லை. அவர் தாமே இந்த புத்தியைக் கொடுத்துத் தாமே தன்னைப் பணியும்படி செய்கிறார். ‘ஜ்வலநஸ்யைவ ஹிமதா’ ‘ஊன் தந்து’ எனும் பாசுரத்தில் ‘தான் தந்த நல் மதியால் தன்பரமென்று தானே எண்ணி’ என்பதையும், ‘ஸாக்ஷீ ஸ்வஸிது ந்ருஸ்ருதி ஶாம் ஸ்வயம்’ என்று ‘தானே, தானே’ ‘ஸ்வயம் ஸ்வயம்’ என்று பாடியதையும் நினைக்கவேணும். அடுத்த ச்லோகத்தில் கடையடியாலும் இது குறிக்கப்படுகிறது. க்ஷீய–தானே நெருங்கச் செய்து. ‘உஷ்ணீஷதி’ என்று ச்ருதி காட்டிய ரஸம். ‘யா து:கோபாயக்ஷேப்த்ரீ பரஹிதரஸிகா ஸைவ தஸ்யாநுகம்பா’ என்று ஸாராவளியில் அநுகம்பையெனும் தயையின் லக்ஷணத்தை ‘பிறருடைய ஹிதத்தில்ப்ராவண்யமுடையவருக்கு அவர்கள் துயரங்களைப் போக்குவதில் இச்சைதான் அவர் தயை’ என்று நிஷ்கர்ஷித்தபடியே இங்கும் வர்ணநம். ஸம்ஸாரநாடகக்கதையின் முடிவையும் காட்டுவது இந்நாடகம். இந்நாடகம் முடியுமங்கமிது. ஸம்ஸாரநாடகத்திலிவனை ஆட்டிவைப்பது ப்ரக்ருதி மாயைப்பெண்–பேய்ப்பெண். அவளாட்டம் ஓய்ந்தால் இவனுக்கினி ஆட்டப்படும் கஷ்டமில்லை. இந்த ஆட்டத்தை நிறுத்தும் ஸூத்ரதாரர் பகவான். ராத்ரியை நீக்குவது அவர் ஸங்கல்பஸூர்யோதயம்.

மேலும்,

உவாயஃ ஸ்வ ப்ராப்தேர் உபநிஷத்யீதஃ ஸ
ஹ்ரவாநு ப்ரஸத்தி தஸ்யாகேஷ ப்ரப
உநிதிபூராஸநமதீ। தஸாரோஹஃ வ்ய
ஸஃ ஸாக்ருதபரிவாகேந ஹேதா நிஜா
நம் தத்தாவி ஸ்வயஷேவிய நிஷ்ப்ராண நிவா
ணஃ ॥

இது உபாயவிபாகாதிகாரஸங்க்ரஹச்லோகம். அதிகாரி விபாகத்திற்குப் பிறகு அங்குமிது மிகவும் ஸங்கதமாய்ப் பொருந்துகிறது. இங்கும் முன் ச்லோகத்தோடு மிகவழகாய்ப் பொருந்துகிறது. எந்த க்ரந்தம் முன்பு ஸாதித்தது, எதில் முன்பு இருந்ததை எதில் பின்பு சேர்த்தது என்று நிர்ணயிப்பது கடினம். முன் ச்லோகத்தில், பகவான் க்ருபையால் தன் திருவடிகளை இவன் வணங்கும்படி செய்து இவன் பாபங்களைப் போக்கி ஸம்ஸாரநாடகத்தை ஓயச்செய்கிறுரென்று கூறப்பட்டது. 'ஸ்வபதி' என்று கூறியது ஸாதநமும் ஸாத்யமுமாகிறது. திருவடி தொழுகைக்கு சாச்வதமான திருவடித்தொழுகை பலம். அடையப்படுபவன் அவன். அடைவிக்கும் உபாயமும் அவன். இப்படி ஸாதநமும் ஸாத்யமும் ஹேதுவும் ஸாத்யமுமொன்றாயிருப்பதுபோல் இருப்பது இந்த அலௌகிக திவ்யவிஷயம். இந்த விஷயத்தை நன்கு தெளியவேண்டியதை இங்கே விளக்குகிறுர். இந்த விஷயமெல்லாம் உபநிஷதர்தம். ஔபநிஷதம்-உபநிஷத்தைக் கொண்டே அறியவேணும். மாஸ்த்ரைக யோநி; மற்றென்றுக்குமெட்டாதது. அதீந்த்ரிய ப்ரஹ்மஸமீபத்தில் அது ஒன்றுதான் வீற்றிருக்கிறது. உபநிஷண்ணமாயிருக்கிறது. நம்மை அந்தப் பரம்பொருளின் கிட்ட ஆநயநம் செய்வது உபநிஷத்து. அதையும் நம் கிட்ட கொணருர். அது ஒன்றுதான் அதை அறியும். அறிவிக்கும். 'வெத வெதயதி'. அது தன் கருத்தைச் சொல்லுவதை நாம் கேட்டே தீரவேணும். அது என்ன சொல்லுகிறது? 'ஸ ஹ்ரவாநு ஸ்வ ப்ராப்தேஃ ஸ்வயா உவாயஃ' 'ஸ்வ ப்ராப்தேஃ ஸ (ஸவ) ஹ்ரவாநு உவாயஃ' அவனும், அவனையடைய உபாயமும், அவனையடைய அவனே உபாயமென்பது இதெல்லாம் உபநிஷதர்தம். 'ஸ்வ ப்ராப்தேஃ ஸ்வயமேவோபாயஃ உத்யுபநிஷத்யீதஃ' என்று ஸாரஸங்க்ரஹவ்யாக்யாநம். 'ஸ ஹ்ரவாநு'-உபாயமென்று உபநிஷத்ப்ரஸித்தனுகிய அந்த பகவான். 'யமேவைஷ வ்ருணுதே தேந லப்யஃ தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்' 'முமுக்ஷுர் வை சரணமஹம் ப்ரபத்யே' முதலிய உபநிஷத்துக்கள் அவனையே உபாயமென்று அறுதியிடுகின்றன. அவனே உபாயமாகில் அவன் நித்யமும் ஸித்தன்தானே. உபாயமாகிய அவனுலே எல்லோரும் முன்பே கரையேறி இருக்கவேணுமேயென்று ஆக்ஷேபம் வருகிறது. அதற்குப் பரிஹாரத்தை இரண்டாமடி கூறுகிறது. ப்ரஸத்தி தஸ்ய-ப்ரஸத்தி என்பது ப்ரஸாதநம்; ப்ரஸாதஃ கோபம் ஆறி அநுக்ரஹம் உதிப்பது. 'ப்ரஸாதே கோபே வா தநயவினோ விபிரஸஙதிஸ' என்றுர் பவபூதி ஜநகர் முகமாக. ப்ரஸாதத்திற்கு எதிர்த்தட்டு கோபம். முன்கோபமிருந்ததை ப்ரஸாதத; என்ற ச்ருதிபதம் காட்டுகிறது. கோபத்திற்கு காரணங்களுக்குக் கணக்கில்லை அளவில்லை. நாம் நன்கு அறிந்ததே. அத்தனை கோபமும் சாந்தமாகித்தான் நம்மிடம் ப்ரஸாதம் உண்டாகும். அந்த கோபத்தை தணித்தேயாகவேணும். அது தானே தணியுமா? தானே தணிவதாயின் இத்தனை காலமாக ஏன் தணியவில்லை. அதைத் தணிக்க வழிதேடவேணும். அந்த வழி மாஸ்த்ரம் சொல்லித்தான் தெரியவேணும். ஹ்ரவாநு-என்பதால் 'ஸமக்ரஸ்ய ஐச்வர்யஸ்ய' என்ற நிருக்தவசநத்தால் பூர்ண ஈச்வரத்தன்மையில் எல்லோருக்கும் ஸமமாக இருக்கவேண்டிய கட்டாயம் ஸூசிதமாகிறது. அவருக்கு நாம் எத்தனை கோபமூட்டி வந்திருக்கிறேம் என்பது நம் மனத்திற்கே தெரியும். 'ப்ரஸத்தி தஸ்ய'-அந்த பகவானுக்கு இருந்த அளவற்ற கோபத்தை ஆற்றி அவர் நம்மிடம் அநுக்ரஹபுத்திவைக்க என்று இந்த அடியின் முதலிலேயே ஆக்ஷேபத்திற்குப் பரிஹாரத்தைத் தெளிவாகக்காட்டுகிறுர். தஸ்ய-என்பதற்கு ரக்ஷோபாயமான

அந்த பகவானுடைய என்று பொருள். 'மதீ' என்றும், 'ஸ்ருதீ' என்றும் இரண்டு பாடங்கள். இந்நாடக ச்லோகத்தில் 'மதீ' என்ற பாடம்தான். 'ஸ்ருதீ' என்று ஸாரப்ரகாசிகை. 'மதீ' என்று ஸாராஸ்வாதிநீ. 'மதீ' என்பதால் உபாயம், உபாயமான ஜ்ஞாநம் என்ற இரண்டும் கிடைக்கும். ஷடங்கம், அஷ்டாங்கம் ஆகிய இரண்டு உபாயங்கள். உக்தே-கூறப்பட்டவை. யாராலே? உபநிஷத்துக்களாலும், பகவானாலேயே பாடப்பட்ட கீதை பாஞ்சராத்ரம் முதலியதாலும் மற்ற ப்ரமாணங்களாலேயும் கூறப்பட்டன. 'ஸாங்க்ஷேபேண ஸரணாகதி ப்ரபத்யே' 'ஹாத்தியிஷாம் தே நிரக்தம் விபத்தி' என்று ப்ரபத்தியையும், அநேகச்ருதிகள் உபாஸநமெனும்பக்தியையும் கூறின. இந்த உபாயம் தொடங்கும்போதே பாபங்களைமன்னிக்கஸங்கல்பமாகிறது. யோகாரோஹம் என்பது ப்ரஸித்தம். இத்தனை நாளாய்ப் பள்ளமடைகளிலே இழிந்து சென்றது. இப்பொழுது உபாயத்தில் ஏறவேணும். இதற்கு நாம் செய்த ஸுக்ருதமேதாவது வேணும். அந்த ஸுக்ருதத்திற்கு பகவத் க்ருபையால் பரிபாகதசை வரவேணும். நம் ஸுக்ருதமோ பூஜ்யம். நாமறிந்ததொன்றும் காணோம். நாமறியாமல் பகவானாக ஏதாவதொன்று நாமறியாமல் செய்ததை ஸுக்ருதம் என்று கணக்கிட்டு அதைத்தானே பரிபக்வமாக்கி தயைக்கு அவகாசஸமயமாக்கவேணும். 'ஹேதா' என்பதை பரிபாகத்தில் அந்வயிக்கவேணும். ஸுக்ருதத்திலன்வயிப்பது உசிதமல்ல ஒட்டாது. ஸுக்ருதம் அத்யல்பமாயினும் அதை பகவான் செய்யும் பரிபாகம் மஹத்-மிகப்பெரியது. 'ஸ்வக்ஷிதவாஞ்ச்சேஷ ஸுக்ருதலக்ஷணை க்ருதிவிக' என்று முதல் அங்கம் 67-ம் ச்லோகத்தினுரையில் இதன் விஸ்தாரம் கண்டுகொள்வது. அந்த ச்லோகத்தை ஸாரவிவரணீ இங்கே உதாஹரித்தது. 'அதிசயிதபரிபாகம் இங்கு மோக்ஷகாரணம்' என்று ஸாராஸ்வாதிநீ. யாருடையஸுக்ருதம்? அது செய்த தேஹாதிகளை யார் கொடுத்தார்? அந்த ஸுக்ருதம் முதலியதை யார் செய்தது? பகவான் அங்கும் முக்ய காரணம். தத்ராபி-அந்த ஸுக்ருதவிஷயத்திலும் ஸ்வயம் நிதாநம்-அவனே ப்ரதாநமான மூலகாரணம். இருவரும் சேராமல் ஒரு கார்யமும் நடக்காது. கர்த்ருத்வத்தில் இருவருக்கும் அந்வயமுண்டு. இரண்டு க்ஷேத்ரஜ்ஞர்களுக்கும் அந்வயமுண்டு. மோக்ஷபலமிருவருக்குமுண்டு. அவன் ப்ரதாநபலீ; அவன் ப்ரதாநகாரணம். அவனன்றியில் இந்த உயிரைக் காப்பாற்றும் கார்யம் நடக்கவே முடியாது. பலம் கொடுப்பவன் அவன் என்பது எப்படி திண்ணமோ அப்படியே அவன் இந்த ஸாதநத்திலும் முக்ய காரணமென்பதும் திண்ணம். எப்படி நிச்சயம்? ஸ்வநிருபித்ராணநிர்வாண:—என்பது அந்த நிச்சயத்திற்கு ஹேதுவை ஸ்பஷ்டமாய் விளக்குகிறது. எப்படி? நாம் என்றைக்கும் அரைகுறையாக அசடாக அல்பமாக, பூர்ணமில்லாமல் கிலமாக கார்யங்களை நிர்மாணம் செய்வதில் நிபுணர். அகிலமாக கிலமில்லாமல் நிர்மாணம் செய்வதில் அவரொருவர்தான் நிபுணர். மோக்ஷமென்பது பலம்; எல்லையற்ற சாச்வத ஆநந்தமான பலம். அதைத்தரும் ஸாதநத்தை நன்றாக அகிலமாக நமக்கு ஒருக்காலும் செய்யத் தெரியாது. ஆகையால் தெய்வம்தான் முக்யகர்த்தாவாகக்கூட இருந்து ஸ்வயமாக இந்த ஸாதநத்தை ஸம்பூர்ணமாக நிர்மாணம் செய்யவேணும். நமக்கு தேஹத்தைத்தந்து ஒவ்வொரு அவஸரத்திலும் அவ்வப்பொழுது வேண்டியதெல்லாவற்றையும் தானே செய்து முழுவதையும் தானே செய்கிறானென்றும் பொருள். 'ஊன்தந்து' என்கிற பாசுரம் இதை முற்றிலும் விளக்குவது. முன் குறித்த பராயத்தாதிகரணஸாராவளி ச்லோகத்தில் 'ஏதே தேஹாதியோகம் திசதி ச நிரதம் வர்த்ததே சாத்ர ஸாரம்' என்று கூறப்பட்டது.

(தொடரும்)

ஸ்ரீ:

ஆசார்யதேவோ பவ

(11வது ஸம்புடம் 9-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

‘ஶாஸ்த்ரார்த்தாந்’ என்று முன்புச்ருதமானதை இவ்விடத்தில் அநுஷங்கம் செய்துகொள்வதால் ஶாஸ்த்ரார்த்தபூதமான அர்த்தங்களை அநுஷ்டிக்கிறான் என்று பொருள் ஏற்படுகிறது. ஆகையால் முன்புசொன்ன தோஷம் வாராது.

ஆசரதே—ஆஸமந்தாத் அநுதிஷ்டதி என்று அர்த்தம் கொள்வதால் தன்னுடைய தர்மங்களை, அங்கபூதமான ஸ்நாநம், ஆசமநம், ஶிகை, யஜ்ஞோபவீதம் முதலிவைகளுடன் தகுந்த காலத்தில் பூர்ணமாக அநுஷ்டிக்கிறான் என்றும் அநுஷ்டாநத்தில் மிகுந்த ச்ரத்தை யுடையவனாக இருக்கிறான் என்றும் ஏற்படுகிறது.

இப்படி ஆசார்யன் ஸகலதர்மங்களையும் ச்ரத்தையுடன் அநுஷ்டித்து வருவதினால், அவனுக்கு ‘வ்ருதைவ பவதோ யாதா பூயஸீ ஜந்மஸந்ததி:’ [அனேகஜன்மங்கள் வ்யர்த்தமாகக் கழிந்தன] என்கிறபடியே இதற்கு முன்பு தர்மாநுஷ்டாநத்திற்கு ஸ்வரூபயோக்யதையில்லாத மரம், செடி, பசு, பக்ஷி ஜந்மங்களில் பிறப்பில்லாமல் ‘உவஹோமேரபி த்ருஷ்டம் நாதூநவேஶா உயெகு| சண்டாலத்வேபி மாநுஷ்யம் ஸர்வதா தாத ஶோபநம்||’ [மனிதனைப் பிறந்தவன் தனக்கு விசேஷ ஸுகாநுபவங்களுக்கு காரணங்கள் இல்லாமையைக் குறித்து வருந்தக்கூடாது. மனுஷ்ய ஜந்மத்திற்குள் சண்டாளனாகப்பிறந்தாலும் அந்த ஜன்மாவானது ஆத்மாவிற்குப் பேரின்பங்களைத் தரக்கூடிய தர்மாநுஷ்டாநங்களுக்கு யோக்யமாக இருப்பதினால் அது நல்லது என்று சொல்லக் கூடியதாகவே யாகும்.] என்கிறபடியே தர்மாநுஷ்டாநத்திற்குத் தகுந்த மனுஷ்யஜாதியில் பிறந்திருக்கிற மாத்ரத்தாலேயே எப்பொழுதும் ஸந்தோஷித்திருக்கிறவனாய் அந்த மனுஷ்யஜன்மத்திற்குள்ளும் ‘ஜ்யா ஜந்மாநேவூா-யந்மாநுஷ்யம் தஸ்மிஞ்ஜாதிர்வ்ருத்தாஸ்’ என்கிறபடி மனிதர்களுக்குள்ளும் மந்த்ரங்களைச் சொல்லக்கூடிய ப்ராஹ்மணஜாதியில் பிறந்திருப்பதினாலும் அதிக ஸந்தோஷத்தை யுடையவனாகயிருக்கையாலே ‘குலங்களாய வீரிரண்டிலொன்றிலும் பிறந்திலேன், நலங்களாய நற்கலைகள் நாவிலும் நவின்றிலேன், புலன்களைந்தும் வென்றிலேன் பொறியிலேன் புனித நின், இலங்கு பாதமன்றி மற்றோர் பற்றிலேனெம்பீசனே’ என்கிற பாசுரத்திலும் ‘இருக்கார் மொழியால்’ என்கிற பாசுரத்திலும் சொல்லுகிறபடி வேதாத்யயன யோக்ய ஜன்மமில்லாமையினால் வைதிகமந்த்ரங்களைச் சொல்லி பகவானை ஆராதிக்கக்கூடிய ஜாதியில் பிறக்கவில்லையே என்கிற துக்கமில்லாதவனாய் ஸம்பூர்ணமான ஸ்வதர்மாநுஷ்டாநத்தினால் ஸந்தோஷத்தோடிருப்பதும் ‘ஆசரதே’ என்கிற பதத்தினால் தோற்றுகிறது.

அதிலும் ‘ஆசிநோதி’ என்கிற ஶாஸ்த்ரார்த்த ஜ்ஞாநத்தை உடையவனாகையால் அந்தந்த வஸ்துவின் உண்மையை அறிந்தவனாகிறான். ஆகையாலே ஸுகமில்லாததனிடத்தில் ஸுகத்வப்ரமம் உண்டாகாது. நாஸ்திகர்களை ஸந்தோஷிக்கச் செய்து அனேகவிதமாக ஸம்பாதித்து வயிறு வளர்ப்பது ஸம்பவிக்காது. வேதாந்தங்களில் சொல்லப்பட்ட பராவர ஆத்மஜ்ஞாநத்தை (எது உயர்ந்தது எது தாழ்ந்தது என்கிற ஜ்ஞாநத்தை) உடையவனாகையாலும், அதிலும் பீஷ்மாதிகளைப்போல் ஶாஸ்த்ரவிச்வாஸமுடையவனாகையாலும், உயர்ந்தது எது, தாழ்ந்தது எது என்கிற ஆத்மவிவேகமற்றவர்களைப்போல் ‘மானேய் கண்மடவார் மயக்கிற்பட்டு, மாநிலத்து நானே நானாவிதநரகம் புகும் பாவம் செய்தேன்’ ‘சிலம்படியுருவிற்கருநெடுங்கண்ணார் திறத்தனாயறத்தையே மறந்து, புலம்படிந்துண்ணும் போகமே பெருக்கிப் போக்கினேன் பொழுதினை’ ‘சூதினைப்பெருக்கிக்களவினைத்துணிந்து சரிகுழல்

மடந்தையர்திறத்து, காதலேமிகுத்துக்கண்ட வாதிரிந்ததொண்டனேன் நமன்றமர்செய்யும், வேதனைக்கொடுங்கிநடுங்கினேன்' 'வம்புலாம் கூந்தல்' என்கிற பாசுரங்களில் சொல்லிய படியே அனேகவித நரகத்தை யடைவதற்குக் காரணமான பாபகார்யங்களில் ப்ரவ்ருத்தியே உண்டாகாது. 'த⁴ர்ம ஏவ ஹதோ ஹந்தி த⁴ர்மோ ரக்ஷதி ரக்ஷித꞉ । த⁴ர்மம் நித்யம் ஸமுத்³யாபயேச் சிவ வாதிகா꞉ ॥' [தர்மமானது தன்னை ரக்ஷிக்கிறவர்களை ரக்ஷிக்கும். விட்டவர்களை நாசம் செய்யும். ஆகையால் கறையான் புற்றை சேர்ப்பதுபோல் தர்மத்தை தினமும் ஸம்பாதிக்கவேணும்.] 'ஏக ஏவ ஸுஹ்ருத்³த⁴ர்மோ நித⁴நே(அ)ப்யநுயாதி ய꞉ । ஶரீரேண ஸமம் நாஶம் ஸர்வமந்யத்து க³ச்ச²தி ॥' [மனிதனுக்கு தர்மம் ஒன்றுதான் இணைபிரியாத தோழன். ஒருவன் இறந்ததும் அவனுடைய பந்துக்கள் கண்ணீர் வடித்து ச்மசானத்தோடு திரும்பிவிடுகிறார்கள். தர்மம்தான் அவன் செல்லுமிடமெல்லாம் அவனைப் பின் தொடருகிறது.] என்கிற ஶாஸ்த்ரத்தில் விச்வாஸமுடையவனும் 'குலந்தானெத்தனையும்' 'இடகில்லேன்' 'செய்தவத்துளார் தம்மிலல்லேன்' 'மனத்திலோர்குளித்து மூன்றனலை' என்கிற பாசுரங்களின்படி தர்மாநுஷ்டானங்களைச் செய்யமுடியாததால் உண்டாகும் கஷ்டமில்லாததாலும், 'ஸோ(அ)வம் வாயு꞉ ஸஜீவதி' என்கிறபடி நைஷ்பல்ய ப்ரஸக்தியில்லாததாலும் தர்மத்தை அநுஷ்டிக்கிறான் என்று பொருள்.

'ஶ்ரத்³த⁴யா' என்கிற விடத்தில் ஆத்மநேபத ப்ரத்யயத்தால் தர்மாநுஷ்டானத்தை 'யஜ்ஞேந தாநேந தபஸா(அ)நாஶகேந' என்கிறபடி டம்பார்த்தமில்லாமல் தன்னுடைய க்ஷேமார்த்தம் செய்கிறானென்று ஏற்படுகிறது.

'ஶப்' ப்ரத்யயத்தால் வர்த்தமான அர்த்தம் தோன்றுவதால் எப்பொழுதும் தர்மாநுஷ்டானநிரதனாய் இருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

'ஸ்வயமாசரதே' என்று ஸ்வயம் ஶப்த சேர்க்கையால் ப்ரயோஜநாந்தரத்தைக் கருதி அநுஷ்டிக்கவில்லை என்பது தெரிகிறது. பதிவ்ரதாஸ்த்ரீகள் பர்த்தாவுக்குச் செய்யும் சுச்ருஷையை ஸ்வயம்ப்ரயோஜநமாகச்செய்யுமாப்போலே ஸ்வயம் புருஷார்த்தரூபமாயும், 'ஸ க்ஷேத்ரஜ்ஞ꞉ ததா²ஹம்' என்கிறபடி பகவானுடைய முகோல்லாஸம் ஒன்றையே ப்ரயோஜநமாயும் எண்ணிச்செய்கிறான் என்றேற்படுகிறது.

ஆசார்யனுக்கு அநுஷ்டாநராஸிக்யத்தினால் தன்னுடைய ஆத்மரக்ஷணம் ஸம்பவித்தாலும் அதிக ஶாஸ்த்ரார்த்த ஜ்ஞாந ஸம்பாதனம் பரோபகாரார்த்தம் என்று முன்பு சொல்லியது எப்படிப் பொருந்தும் என்கிற சங்கை உண்டாகக்கூடும். அதற்கு ஸமாதானம்:- 'ஆசாரே ஸ்தா²பயத்யபி' என்கிறவிடத்தில் முன் கூறிய 'ஶாஸ்த்ரார்த்தாந்' என்கிறதை இவ்விடத்தில் சேர்த்துக்கொண்டாகிலும், அல்லது 'லோகாந்' என்று ஒரு பதத்தைச் சேர்த்துக்கொண்டாகிலும் அந்வயம் கொள்ளவேணும். ஆசார்யன் தன் உபதேச மூலமாகவும் 'யத்³யதா³சரதி ஶ்ரேஷ்ட²꞉' என்கிறபடியும் எல்லா மனிதர்களையும் தர்மாநுஷ்டானத்தில் நிலைநிறுத்துகிறான். ஆகையால் முன்கூறிய சங்கைக்கு இடமில்லை.

'ஆசாராந் ஸ்தா²பயத்யபி' என்றும் சொல்லலாம். அப்படிச் சொல்லாமல் 'ஆசாரே ஸ்தா²பயத்யபி' என்று சொன்னதால் உபதேசமானது ஸ்தாபநபர்யந்தம் முடிகிறது என்று தேறுகிறது.

தர்மாநுஷ்டானத்தில் சிஷ்யர்களுக்கு ஶாஸ்த்ரார்த்தத்திலுள்ள விச்வாஸமும், ச்ரத்தையும்தான் காரணம். ஆகையால் ஆசார்யோபதேசத்தினால் சிஷ்யன் தர்மாநுஷ்டானங்களை செய்கிறான் என்பது எப்படி பொருந்தும்? என்கிற ஸந்தேஹம் உண்டாகலாம். அதற்கு ஸமாதானம்.

ஸ்ரீதேசிகன் தத்வத்ரயசுளகம் என்னும் க்ரந்தத்தில் 'இத்தத்வஹிதபுருஷார்த்தங்களில் தெளிவும், துணிவும், த்வரையும்

உண்டாகும்படி மூலமந்த்ராதிகளாலே ஸம்யக்காக உபதேசிக்குமவன் ப்ரதாந ஆசார்யன்' என்று அருளிச்செய்திருக்கிறார்.

'அத சேத் த்வமிமம் தர்ம்யம் ஸங்க்ராமம் ந கரிஷ்யஸி। தத: ஸ்வதர்மம் கீர்த்திஞ்ச ஹித்வா பாபமவாப்ஸ்யஸி॥' 'பக்தோऽஸி மே ஸகா சேதி ரஹஸ்யம் ஹ்யேதது(த்)தமம்' 'இதம் து தே குஹ்யதமம் ப்ரவக்ஷ்யாம்யநஸூயவே॥' [பார்த்த! க்ஷத்ரியதர்மமான யுத்தத்தை நீ செய்யாவிடில் உன்னுடைய தர்மத்தையும், கீர்த்தியையும் விட்டு பாபத்தை அடைவாய். நீ என்னிடத்தில் பக்தியுடையவனாகையாலும் தோழனாகையாலும் என்னுடைய உபதேசங்களை அஸூயையில்லாமல் கேட்பதாலும் உனக்கு மிகவும் ரஹஸ்யமானதைச் சொல்லுகிறேன்.] என்றும், 'இவ்விஷயத்தில் ச்ரத்தை யுடையவனும் அஸூயை இல்லாதவனாகவும் இருந்தால் எல்லா பாபங்களிலிருந்தும் விடுபடுவாய். பிறகு என்னையே அடைவாய்; இது ஸத்யம்; அஹங்காரத்தால் என்னுடைய உபதேசத்தைக் கேட்காவிடில் நாசமடைவாய்' என்றும் க்ருஷ்ணன் உபதேசம் செய்ததால்தான் 'கரிஷ்யே வசநம் தவ' [உம்முடைய நியமநப்படி நடக்கிறேன்.] என்றான் அர்ஜுனன். ஆகையால் தர்மாநுஷ்டாநத்தில் விச்வாஸபூர்வகமாய் த்வரையுடன் அநுஷ்டிப்பதற்கு உபதேசமே இங்கு காரணமாயிற்று. இவனுக்கு ப்ரவ்ருத்தி யுண்டாகாவிடில் உபதேசம் நிஷ்பலமாகும். சிஷ்யர்களுக்கு தர்மாநுஷ்டாநத்தில் நிலைநிற்கும்படி செய்யும் உபதேசத்தைத்தான் 'ஆசாரே ஸ்தாபயதி' என்பது சொல்லுகிறது. ஆகையால் விரோதமில்லை.

இவ்விடத்தில் 'ஸ்தாபயதி' என்று சொல்லியிருப்பதால், ஆசார்யன் அநுப்ரவேசாவதாரமாகையால் 'தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி' என்று பகவான் சொல்லியது நினைவிற்கு வருகிறது.

ஆசார்யன் ஜனங்களுக்கு தர்மாநுஷ்டாநங்களைச் செய்யும்படி உபதேசிப்பது க்யாதிலாப பூஜைகளை உத்தேசித்தல்ல. பரோபகாரம் செய்வதால் உண்டாகும் புண்யத்தைக் கருதியுமல்ல. ஆசார்யன்ஜ்ஞாநவானாகையால்நச்வரமான பலங்களை விரும்பமாட்டானல்லவா? லோகஸம்ரக்ஷணார்த்தம் ஆசார்யன் அவதரிப்பதால் துக்கமயமான இந்த ஜகத்தைப்பார்த்து, அதை ஸஹியாமல் துக்கத்தைப்போக்கவேண்டும் என்கிற இரக்கத்தினால் அவர்களுக்கு உபதேசம் செய்கிறான். இவ்வர்த்தம் 'பரக்கும் புகழ் வரும்......சுரக்குஞ் சுரவிகள்போல் சொரிகின்றனர் சொல்லமுதே' என்ற பாசுரத்தில் சொல்லப்பட்டது.

இவ்விதம் ஜனங்கள் தர்மாநுஷ்டாநநிரதர்களாக இருக்கவேண்டும் என்கிற ஆசார்யனுடைய ப்ரவ்ருத்தியானது தயாமூலம் என்னும் விஷயம் பரஸ்மைபத ப்ரத்யயத்தால் ஸூசிக்கப்படுகிறது.

வர்த்தமாநார்த்தக லட் ப்ரயோகத்தால் தர்மஸம்ஸ்தாபநத்திற்கு ஸார்வகாலிகத்வம் சொல்லப்பட்டதாகிறது.

'அபி' ஶப்தத்தால் களையை எடுக்காமல் பயிரை ரக்ஷிப்பது எவ்விதம் முடியாதோ அப்படியே அதர்மத்தைப் போக்காமல் தர்மரக்ஷணம் ஸம்பவிக்காதாகையால் தர்மஸ்தாபநம் செய்யவேண்டும் என்று சொல்லியிருப்பதாலேயே அதர்மவிநாசமும் சொல்லப்பட்டதாகிறது என்பது த்யோதிதம்.

எதனால் இந்த மூன்று கார்யங்களை செய்கிறானோ, அதனாலேயே ஆசார்யன் என்று சொல்லுகிறோம். இவைகளினால் ஆசார்ய ஶப்தம் க்ரியாஶப்தம்தான் என்று ஸித்திக்கிறது. இப்படிப்பட்ட லக்ஷணங்களுடையவர்கள் எவர்களோ அவர்களே ப்ரதாந ஆசார்யர்கள்.

'உபநீய து ய: ஶிஷ்யம் வேதமத்யாபயேத் த்விஜ:। ஸகல்பம் ஸரஹஸ்யஞ்ச தமாசார்யம் ப்ரசக்ஷதே॥' என்று மநு சொல்லுகிறார். இதன் பொருள். கல்பம்- தர்மாநுஷ்டாந ஶாஸ்த்ரம். ரஹஸ்யம்- உபநிஷத். உபநிஷத் வேதமாகிலும் அவை முக்யமானதால் தனியாகக் குறிப்பிட்டிருக்கிறார். இவ்விடத்தில் வேதஶப்தம் அங்கத்தோடு கூடின

வேதபரம். அது இதிஹாஸபுராணங்களுக்கும் உபலக்ஷணம். சப்த ப்தம் தர்மஶாஸ்த்ரங்களுக்கு உபலக்ஷணம். அத்யாபகஶப்தத்தால் தான் அத்யயநம் செய்திருக்கவேண்டியது ஸித்தமாகிறது. ரஹஸ்யம் என்றிருப்பதால் ப்ரஹ்மவித்யாப்ரதாநமும் ஸித்திக்கிறது. ஜ்ஞாநஸம்பாதநம் தர்மாநுஷ்டாநார்த்தமாகையால் 'ச யஜ்ஞவித்யெசு' என்பதால் தர்மாநுஷ்டாநமும்சொல்லப்பட்டதாகிறது. இந்த ச்லோகத்தில் சொல்லப்பட்டதும் ப்ரதாநாசார்யலக்ஷணம் தான். இதனாலும் ஆசார்ய ஶப்தத்திற்கு க்ரியா ஶப்தத்வம் கூறப்பட்டதாகிறது.

'ஏகதேஶந்து வேதஸ்ய வேதாங்காந்யபி வா புந: । யோऽத்யாபயதி வ்ருத்த்யர்த்தம் உபாத்யாய: ஸ உச்யதே ॥' (தான் ஜீவிப்பதற்காக எவன் வேதத்தின் சிலபாகங்களையோ, அங்கங்களையோ உபதேசிக்கின்றானோ அவனுக்கு உபாத்யாயன் என்று பெயர்.) இந்த வசநத்தில் 'வ்ருத்யர்த்தம்' என்றிருப்பதாலும், ஆசார்யலக்ஷணத்தில் 'வ்ருத்யர்த்தம்' என்றில்லாததாலும், ஆசார்யன் வ்ருத்தியை உத்தேசித்து அத்யாபநம் செய்யக்கூடாது என்று மநுவின் அபிப்ராயம்.

'வேதமநூச்யாசார்யோऽந்தேவாஸிநமநுஶாஸ்தி' [வேதத்தை ஆசார்யன் சொல்லிவைத்து ஶிஷ்யனை நியமிக்கவேண்டும்] என்று வேதத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. அநுஶாஸ்தி— அநுஶிக்ஷ்யதி—என்று அர்த்தம். 'ஸத்யம் வத' [ஸத்யத்தைச் சொல்] 'தர்மம் சர' [தர்மத்தைச் செய்] 'ஸ்வாத்யாயாந்மா ப்ரமத:' [வேதாத்யயநத்தில் அநவதாநம் கூடாது.] 'ஆசார்யாய ப்ரியம் தநமாஹ்ருத்ய ப்ரஜாதந்தும் மா வ்யவச்சேத்ஸீ:' [ஆசார்யன் விரும்பிய தக்ஷிணையைக்கொடுத்து ஸந்ததி வ்ருத்தியின் பொருட்டு விவாஹம் செய்துகொள்.] 'ஸத்யாந்ந ப்ரமதிதவ்யம்' [ஸத்யத்திலிருந்து நழுவக்கூடாது] 'தர்மாந்ந ப்ரமதிதவ்யம்' [தர்மத்திலிருந்துநழுவக்கூடாது.] முன்பு 'ஸத்யம்வத, தர்மம் சர' என்று சொல்லியிருக்க மறுபடியும் சொன்னது ஆதராதிஶயத்தால். 'குஶலாந்ந ப்ரமதிதவ்யம்' [குஶலம்- தேவார்ச்சனை முதலிய மங்கள கார்யம், அதிலிருந்து நழுவுதல் கூடாது.] எட்டு ஆத்மகுணங்களுக்கு மத்தியில் மங்களமும் சொல்லப்பட்டிருக்கிறது. நிஷித்தமில்லாத மங்களாசரணங்களை முமுக்ஷுக்களும் செய்யலாம். ப்ரஶஸ்தாசரணம் நித்யமாகையாலே. ஆகையாலேயிறே, ஸ்வரூபாநுகுணமாக ஶாந்திபௌஷ்டிக கர்மாக்களுடைய அநுஷ்டாநம் காணப்படுகிறது.

'தேஷாம் ப்ரதிஷ்டமாநாநாம் தௌம்யோ ஜ்ஞாநவிதாம் வர: । ஸர்வவிக்நப்ரஶமநாநி ஸாமாநி ஜகௌ ததா ॥' [பாண்டவர்கள் வநவாஸம் செல்லும்போது தௌம்யர் எல்லா விக்நங்களும் போவதற்கு ஜபம் செய்தார்.] என்று மஹாபாரதத்தில் உள்ளது. காளிதாஸனும் 'ச்ரியே தாமேஜ்ஞை:' என்றான் 'பூத்யை ந ப்ரமதிதவ்யம்' [ஐச்வர்யத்தின் பொருட்டு ப்ரயத்நம் செய்.] என்கிற பாஷ்யம், 'யஜ்ஞாத்பவதி பர்ஜந்ய:' என்கிற கீதாவசநமும் உபபந்நமாகிறது. ஆகையாலேயே பஞ்சகாலபத்தியில் உபாதாநகாலம் சொல்லப்பட்டதும் ஸங்கதமாகிறது. 'ஸ்வாத்யாய ப்ரவசநாப்யாம் ந ப்ரமதிதவ்யம்' வேதாத்யயநம் செய்தல், சொல்லிக்கொடுத்தல்களிலிருந்து நழுவுதல் கூடாது. 'தேவபித்ருகார்யாப்யாம் ந ப்ரமதிதவ்யம்' தேவகார்யத்தையும் பித்ருகார்யத்தையும் விடாமல் செய்யவேண்டியது. 'மாத்ருதேவோ பவ' 'பித்ருதேவோ பவ' 'ஆசார்யதேவோ பவ' 'அதிதிதேவோ பவ' [தெய்வத்தை பூஜிப்பதுபோல் தாயார், தகப்பன், ஆசார்யன், அதிதி இவர்களை பூஜிக்கவேண்டும்.] 'யாந்யநவத்யாநி கர்மாணி தாநி ஸேவிதவ்யாநி' [ஶிஷ்டாசாரமாகிலும் ஶ்ருதிஸ்ம்ருதி விரோதமில்லாதகார்யங்களை செய்யவேண்டும்.]

(தொடரும்)

ஸ்ரீ:

நந்தனோத்ஸவ நினைவுகள்

(11-வது ஸம்புடம் 9-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ஆறும் திருநாள் இரண்டுவேளையும் இன்பம் மிகுந்த திருநாளென்றே சொல்லவேண்டும். காலையில் ஸ்ரீவேணுகோபாலன் திருக்கோலம். வழக்கம்போல் உதயத்திற்கு முன்பே நாலரை மணிக்குப் புறப்பாடாகியது. அதற்கும் முன்பு சூர்ணாபிஷேகம். திருமலையில் மூலவருக்கு முதல் நடந்தேறிப் பிறகு இந்த திருக்கோலத்தோடு நிகழ்ந்தது உத்ஸவ எம்பெருமானுக்கு. வாஹனமண்டபத்தினின்று புறப்பாட்டை அறிவிக்கும் அடுக்குவெடி விழுந்ததும் ஏராளமாக அடியார்கள் குழுமிவிட்டனர். அழகிய பொற்சப்பரத்தின்மீது சின்னஞ்சிறு கைகளில் தாங்கிய சிறு வேணுவுடன் ப்ரபு ஸேவைஸாதித்தபோது கண்டவர்மனம் கரைந்துருகியது. இப்படியும் ஒரு அழகா? இது விபவமா அர்ச்சையா என்றெல்லாம் தீராப்ரச்னைகள் எழுந்தன அனைவருள்ளங்களிலும்.

நான்காம் திருநாள் பரமபதநாதன் திருக்கோலத்தில் அர்ச்சாரூபத்தில் பரரூபம் கலந்து பெருமை தாண்டவமாடியது. இன்றைக்கோ அர்ச்சையில் விபவம் தோற்ற பேரழகு பொலிந்துநின்றது. அதுவும் கண்ணன் வடிவழகு. 'கண்ணன் கரிகிரிமேல் நின்றனைத்துங் காக்கின்றானே' என்றும் 'த்ரிவேதீமூர்த்தயே த்ரியாத்மனே வஞ்சஹேதவே। வரதாய நமஸ்துப்யம் வஹ்ன்யாஹ்ருதஹவிர்புஜே ॥' என்றுமெல்லாம் வரதனையும் கண்ணனையும் அபேதமாக அநுபவித்துக் காட்டியருளிய தேசிகோத்தமன் ஸ்ரீஸூக்திகள் மெய்ப்பிக்கப்பட்டன.

ஸ்ரீமத்பாகவதத்தில் சுகப்ரஹ்மம் வேணுகோபாலனை வர்ணித்த ச்லோகம் நினைவிற்கு வருவதற்குக் கேட்கவேண்டுமா?

'பர்ஹாபீடம் நடவரவபு: கர்ணயோ:
கர்ணிகாரம் பிப்ரத்வாஸ: கனககபிசம்
வைஜயந்தீம் ச மாலாம்। ரந்த்ராந்வேணோ:
அதரஸுதயா பூரயந் கோபவ்ருந்தை:
வ்ருந்தாரண்யம் ஸ்வபதரமணம்
ப்ராவிசத்கீதகீர்த்தி: ॥'

திருமுடியில் மயிற்தோகை; திருவரையில் பொற்சரிகையிட்ட அழகிய பீதாம்பரம்; திருத்தோள்களில் அத்புதமான மாலைகள்; கூட்டம் கூட்டமான கோபர்கள் அவன் பெருமைகளைப்பாட புல்லாங்குழலின் தொளையில் தனது திருவாயின் அமுதப்புனலை நிரப்பிக்கொண்டு தன் திருவடி ஸ்பர்சத்தால் அழகாக்கப்பட்ட பிருந்தாவனத்தில் அன்று நுழைந்து சென்றதுபோலவே இன்றும் காஞ்சி மாநகரின் திருவீதிகளில் எழுந்தருளினான். இல்லை. இல்லை.

கம்பன் அநுபவித்ததுபோல்—

'வீதிவாய்ச் செல்கின்றான்போல் விழித்
திமையாது நின்ற மாதரார் கண்களூடே'

சென்றான். இவனே உண்மையில் யாவர்க்கும் கண்ணன்.

வம்சீவிபூஷிதகரனாகிய கண்ணனை 'ப்ரஹ்மம் நிர்க்குணம், ரூபம் கிடையாது' என்று ஸித்தாந்திப்போரும்கூட தம்மையும் தமது ஸித்தாந்தங்களையும் மறந்து கொண்டாடுவதைக் காண்கிறோம். அப்படியிருக்க ஆழ்வார் ஸூக்திகளில் நனைந்த உள்ளங்களைப் பெற்ற அங்கு அன்று கூடியிருந்த மஹான்களின் அநுபவத்தை எப்படிச் சொல்வது? 'இட அணரை இடத்தோளொடு சாய்த்து இருகை கூடப் புருவம் நெறிந்தேற' 'சிறுவிரல்கள் தடவிப் பரிமாறச் செங்கண் கோடச் செய்யவாய் கொப்பளிப்ப' என்றெல்லாம் பெரியாழ்வாரநுபவத்தை எண்ணி எண்ணி இரங்கினர்கள் பலர். 'திரண்டெழுதழை முகில்வண்ணன் செங்கமலமலர்சூழ் வண்டினம்போலே சுருண்டிருண்டு குழல் தாழ்ந்த முகத்தான் ஊதுகின்ற குழல்' என்று அநுஸந்தித்த ஒருவர் அப்படியே மயங்கி இன்புற முயங்கி 'என்னப் பனைப் பார்த்துத்தான் பெரியாழ்வார்

இப்படிப்பாடினரோ?' என்று புலம்ப ஆரம்பித்தார். பெருமாளைப் பின்புறம் ஸேவித்துவிட்டு முன்னே வந்த ஒருவர் சிலிங்காரத்தால் குழல்தாழவிட்டுத் தீங்குழல் வாய்மடுத்தூதி யூதி அலங்காரத்தால் வருமாயப்பிள்ளை அழகு' இதுவேயென்று ஆரவாரித்தார். லீலாசுகரது க்ருஷ்ணகர்ணாம்ருத ச்லோகங்களில் பரிசயமுடைய ஒருவர் அநுபவம் இன்னும் விலக்ஷணமாக இருந்தது.

'வ்ருத்யஸவாஜவேதம்ஸித பஹிபஹம்
ஸாவீக்ருதாநநிவெஶிதவெணுநாடு |
தெஜஃவரம் வரகோரணிகம்வரஷாக
ரூாணவாயாணஸபெ ஐஐ ஸஞியத்தாழ ||'

அக்ஷர அக்ஷரமாக இந்த ச்லோகம் இந்தப்பிரபுவினுடைய இந்த திருக்கோலஸேவையில் அங்வயித்து அங்வர்த்தமாக விளங்குவதைக்கண்டு அப்படியே மோஹித்துநின்றார். திருவடிகள் வ்யத்யஸ்தமாக நிற்கும் நிலையிலேயே அவர் கண்ணும் மனமும் லயித்துநின்றது விளங்கியது.

பன்னியுரைக்குங்கால் பாரதமாய்ப் பெருகும். சுருங்கச்சொல்லில் எங்கெங்கே ஆழ்வான் பட்டர் தேசிகன் முதலிய பக்தர்கள் வேணுகோபாலன் வடிவழகை வர்ணித்திருக்கின்றனரோ அவர்கள் சொற்சித்திரங்களெல்லாம் ஒன்றுகூடி வடிவெடுத்த ஒரு பொற்சித்திரமாக விளங்குகிறான் வரதன். அவன் திருத்தோளில் விளங்கிய மாலையின்மேல் சாய்ந்துகொண்டு ஒப்பாரமாக இருபுறமும் நின்ற நாச்சிமார்கள் மஹிஷீணும் அநிமேஷதர்சனீயமான அவ்வடிவழகை அடியார்களுக்கு மேலும் ஒரு படி தர்சனீயமாகச் செய்தார்கள். இந்த வடிவழகுக்குப் பல்லாண்டுகூறும் பின்வரும் ச்லோகத்தோடு முடித்துக்கொள்கிறேன்.

'ஶௌஜள கெகிஶிவணிநீ ஜயாரிஶாயாரா
யரெவஸநீ வீநாம்ஸெ வநஶாவிநீ ஹரஜி
ஶுஸத்தாரணரகஶெுாவிநீ|ஶ்ராணரர்ாம்வீத
ஓகவுவிநீ வரணயொ: வ்ருத்யஸ விநரா-
ஸிநீ வீஶா காவநஶொஹிநீ விஜயதெ
வைநராவநாவாஸிநீ ||'

* * * *

வேணுகோபாலவரதன் வடிவழகும், அதை வர்ணிக்கும் ப்ரமாணங்களும் ஒருபுறம் நிற்க, திருக்கையில் பிடித்த வேணுவின் நுனியில் நீலக்கற்களால் செய்யப்பட்ட வண்டு ஒன்று விளங்கியது. இதன்கண் மிகுந்த வ்யாமோஹம் நம் ஸ்ரீ பெரிய அழகிய சிங்கர் திருவுள்ளத்திலுண்டு. இந்த திருக்கோலத்தை நேரில் மங்களாசாஸநம் செய்தருளும்போதும் பரோக்ஷத்தில் த்யாநம் செய்தருளும்போதும் வண்டின் த்யாநமே பெரிதும் பிச்சேற்றும் என்று அடிக்கடி ஸாதிக்கக்கேட்டதுண்டு. 'குழவிருண்டு சுருண்டேறிய குஞ்சிக் கோவிந்தனுடைய கோமளவாயில் குழல் முழைஞ்சுகளினூடு குமிழ்த்துக் கொழித்திழிந்த அமுதப்புனல்தன்னை'த் தம் திருத்தகப்பனார் பாடக்கேட்டு 'தழையின் பொழில்வாய் நிரைப்பின்னே நெடுமாலூதிவருகின்ற குழலின் தொளைவாய் நீர் கொண்டு குளிர முகத்துத் தடவீரே' என்று அன்று அங்கலாய்த்த ஆண்டாள்தான் இவ்வண்டு வடிவெடுத்து வேணுவில் ஸம்பந்தப்பட்டிருக்கிறாள் என்று அடியேன் நினைப்பதுண்டு.

* * * *

இரண்டு நிகழ்ச்சிகள்மட்டும் தனிப்படக் குறிக்கப்படவேண்டியவை. 1. முதல்புறப்பாட்டில் ஒரு திருமாளிகை வாசலில் நெடுநேரம் நின்று தாமும் தம்மடியார்களும் ஸத்காரம் பெற்றமை. அந்த திருமாளிகைக்கு 'ப்ருந்தாவனம்' என்ற பெயரென்று பின்பு தெரிந்துகொண்டேன். வரதன் க்ருஷ்ணனுனபோது ஸௌலப்யம் ஒருபடி மிக்குநிற்குமாகையால் எதையாவது வ்யாஜமாகவைத்து பின்னும் சற்றுநேரம் அவனழகை அள்ளிப்பருகலாமன்றோ? ஒரு பொய்யும் அமையும் இதற்கு. 'அந்தமொன்றில்லாத ஆயப்பிள்ளை அறிந்தறிந்து இவ்வீதி போதுமாகில் பந்து கொண்டானென்று வளைத்துவைத்துப் பவளவாய் முறுவலும் காண்போம் தோழி' என்று ஆய்ச்சியர்கள் அன்று திட்டம்போட்டதாகப் பெரியாழ்வார் பேசவில்லையா. முன்னொரு ஸம்வத்ஸரத்தில் இத்திருநாளில்நடந்தநிகழ்ச்சியொன்று நினைவிற்கு வருகிறது. உத்ஸவ ஸம்ப்ரமத்தில் திருக்கோயிலினின்று எழுந்தருளும்போது திருமுடியில் மயிற்பீலியில்லா

மலைப்பெருமாளெழுந்தருளிவிட்டார். பொழுது புலர்ந்ததும் ஒரு கடையில் நுழைந்து அழகிய சுருங்கண்தோகை மயிற்பீலியொன்றை வாங்கிக்கொண்டு பெருமாள் எழுந்தருளுவதை எதிர்பார்த்துநின்றார் ஒரு உளங்கனிந்த அன்பர். பெருமாள் அருகே எழுந்தருளியவுடன் நிறுத்தி அந்த மயிற்றோகையை அர்ச்சகர் களைக்கொண்டு அவன் திருமுடியில் சூட்டினார். சற்று ஒரு அடி பின்வாங்கி ஆபாதசூடம் ஸேவித்தார் பெருமாளை. அவர் அப்போது அடைந்த அநுபவத்தை அவரால் பேசமுடியவில்லை. அதை ஸ்வாமி தேசிகன் யாதவாப்யுதயத்தில் பேசியிருக்கிற அழகை நினைத்தேன் அப்போது.

‘அநுப்ராணாவேவ தம் ஸஹஜமதம் விஜ்ஞாய
தம் வேத விஹ்ருஷ்யந்தீ । அதிவ்யாபஷ்ய
க்ருபேஸ்வ கோவீ ஸமேயிஹாஜாநேஜஸ்த்ஸே
யிழ ॥’

இந்த அளவில் அவனது ஸௌலப்யத்தையும் அவனடியார்களது இன்ப அநுபவங்களையும் க்ருஷ்ணாவதாரத்திலும், க்ருஷ்ணவேஷதாரி வாதனிடத்திலும்தான் காணலாம்.

மற்றொரு நிகழ்ச்சி திரும்புகாலில் யாதவர்கள் சத்திரத்தில் மண்டபப்படி கண்டருளியது. யாதவர்களென்றால் பெற்றம்மேய்த்துண்ணும் குலத்தவர்களன்றோ. இந்த திருக்கோலத்தில் அவர்களிடம் ப்ரீதி ஒருபடி மிகுந்து நிற்குமன்றோ எம்பெருமானுக்கு! சில வருஷங்களாக நடைபெறும் இம்மண்டபப்படி வெகு ச்ரத்தையுடன் செய்யப்பட்டு வருகிறது. பொற்சப்பரத்தை விட்டிறங்கி நாச்சிமாரும் தாமுமாக ஒரு அரைமணிகாலம் மண்டபத்துக்குள் தங்கிப் பிறகே திருக்கோயிலுக்கு எழுந்தருளினான் எம்பெருமான். ஒரு உரிபடி மஹோத்ஸவத்தில் அழகியமணவாளனை மங்களாஶாஸநம் செய்துகொண்டிருந்த பட்டரை வழக்கமான இடத்தில் காணவில்லையாம். தேடிப்பார்த்தபொழுது உரியடிக்க வந்திருந்த இடையர்கள் கூட்டத்திற்கலந்து நின்றதைக் கண்ணுற்றார்கள் ஸ்ரீபாதத்துமுதலிகள். ‘இது வென்’ என்று அவர்கள் வினவ, ‘இன்று நம் பெருமாள் அருள்நோக்குக்கு இந்த இடையர் கோஷ்டி பள்ளமடையாயிருக்கும்’ என்று அருளிச்செய்தனராம்.

வாஹனமண்டபம் எழுந்தருளித் திருத்திரை சேர்த்தவுடன், அனைவரும் உத்ஸவம் முடிந்துவிட்டது என்று அகல ப்ராப்தமாயிருக்க அதற்குமாறாகக் கூட்டம் அதிகரித்துக் கொண்டேவந்தது. இதற்குக் காரணம் ஒரு நாழிகையில் விளங்கியது. மறுபடி திருத்திரை நீக்கப்படவும் முன்னிலும் சீரியதோர் காட்சி கண்ணையும் மனத்தையும் கவர்ந்தது. பெருமாளும் நாச்சிமார்களுமாக ஒய்யாரமாக எழுந்தருளுகிறார்கள் ஏகாந்த ஸேவைக்கு. புஷ்பங்களும் மாலைகளும் அகற்றப்படவே இரு திருக்கைகளில் திருவாழி திருச்சங்கும் மற்ற இரு திருக்கைகளில் வேணுவுமாக ஸேவைதந்தான் அருளாளன். திருவீதியிலெழுந்தருளும்போது பின்னால் மட்டும் திருவாழியும் சங்கமும் காணப்பட்டனவேயன்றி முன்னால் மறைந்திருந்தன. இப்பொழுது முன்னும் பின்னும் திருக்கையிலாழ்வார்கள் ப்ரகாசித்தார்கள். இந்த ஸேவை அர்ச்சையுமில்லை, விபவமுமில்லை. அர்ச்சையாயின் வேணுவில்லை; விபவமாயின் சங்குசக்ரங்களில்லை; உபஸம்ஹரிக்கப்பட்டபடியால். இது ஒரு விலக்ஷணமான ஸேவை. சுகப்ரஹ்மமும் காணாதது. பெரியாழ்வாரும் தேசிகனும்மட்டுமே கண்டது. ஏககாலத்தில் குழலும் சங்கமும் தாங்கி ஒருபோதும் சுகப்ரஹ்மத்துக்கு ஸேவை ஸாதிக்காத ப்ரபு. ‘தூவலம் புரியுடைய திருமால் தூயவாயிற் குழல்’ என்று பெரியாழ்வாரும், ‘வம்ஶேந ஶ்வஸிதநாவ நிஷேவிதம் தே ஸிஞ்ஜாயா:’ என்று தேசிகனும் பேசும்படி அவர்களுக்கு அநுபவிக்கத் தன்னைக்கொடுத்திருக்கிறான். அந்த பேரநுபவம் அங்குள்ளோரனைவருக்கும் ப்ராப்தமாகியது.

* * * *

மாலை யானைவாஹனம். பெரும்பாலும் அதை ஆனைவாஹனமென்றே சொல்லுவார்கள். அதுவுமுண்மையே. ஏனெனில் அவனுக்கு ஆன வாஹனமே அது. அயோத்யா வாஸிகள் மனோரதித்தபடி ‘கஜேந ஹேமதாயாஷு’ தான். மஹத்தான கஜம். ப்ரஹ்மாண்டமான யானை. கால்களில்லாமலே ஒரு

பெரிய உயிருள்ள யானையைக்காட்டிலுமுயர்ந்த யானை. அதன்மீது பெருமாள்ஆரோஹணித்து புறப்பாடு கண்டருளும்போது ஜனங்களெல்லாம் அண்ணாந்தாலன்றி அவனை ஸேவிக்க முடியாது. கருடோத்ஸவத்திலும் காட்டில் உயர்த்தி. இன்றுமட்டும் ஒரே குடை. மற்ற மஹோத்ஸவங்களிலெல்லாம் இரட்டைக்குடை சாற்றிக்கொள்வது. இந்த யானையின் மீதும் திருத்தேரிலும் எழுந்தருளும்போது ஏக சத்ராதிபத்யம் பார்த்தமாத்திரத்தில் புலனாவது. கோபுரவாசலில் எழுந்தருளும்போது கோபுரம் நிறைந்திருக்கும் அக்காட்சியை ஒருதரம் ஸேவித்தபேர்கள் மறக்கமுடியாது. இந்த உத்ஸவத்தில் அநுயாத்திரையாய்ப் போகாதபேர்கள் சிலரே. அவர்களும் எப்படியாவது வண்டிகளிலாவது புறப்பட்டு கச்சித்தெருவுக்குப் போய்ச்சேர்ந்துவிடுவார்கள். ராஜவீதியென்ற பெயர்வாய்ந்த அந்தத் திருவீதியில் ப்ரவேசிக்கும்போது திருச்சின்னம் பரிமாறுவார்கள்.

> 'அத்திகிரி அருளாளப் பெருமாள்வந்தார்
> ஆனைபரிதேரின்மேல் அழகர் வந்தார்
> கச்சிதனில் கண்கொடுக்கும் பெருமாள் வந்தார்'

என்றெல்லாம் ஆரவாரித்துக் கொண்டாடிய ஆசார்யோத்தமன் அருளிச்செயல்கள் நினைவிற்கு வாராமற்போகா. 'அனவதிகவிபூதி' யென்று அவர் அநுபவித்துப் பேசியதினுண்மையும் அன்றே நன்கு மனத்தில்படியும். அகன்று நீண்ட அந்த வீதிமுழுவதும் ஒரே ஜனமயம். தீபங்களும் தீவட்டிகளும் ஏராளமாகப் ப்ரகாசிப்பன. உபயவேதபாராயண கோஷ்டிகளும், நாதஸ்வரம் பாண்டு முதலிய வாத்தியவிசேஷங்களும் மங்கள ஒலியைப் பரப்பிவருவன. அப்பெருந்திரளை அநுக்ரஹித்துக்கொண்டு யானைமீது சம்பிரமாக அமர்ந்திருக்கும் அழகும் எழிலும் சொல்லுந்தரமன்று. அப்படியே அனைவரும் நகர்ந்து செல்லவும் கங்கைகொண்டான் மண்டபமும் கடந்து, ஏகாம்பரேச்வரர் ஆலயத்திற்கு எதிரே பின்புறமாக எழுந்தருளி அங்கே ஏசல் கண்டருளுவர் பெருமாள். இதைக் காண இன்னும் அதிகமான ஜனத்திரள் அங்கே தேங்கிக்கிடக்கும். மூன்றுமுறை போய் வந்து பிறகு மூன்றுமுறை இடம் வலமாகத் திரும்பியபிறகு திருஷ்டிகழிக்கப்பட்டு மங்கள ஹாரத்தியாகும். அப்பொழுது ஜனங்களின் ஆரவாரத்தை நேரில் பார்த்து மகிழவேண்டும். ஒருகோடி மக்கள் சிரமேல் கைகுவித்து அவனை வாழ்த்துவார்கள். அவன் வைபவமும் எல்லோருக்கும் எவருக்கும் மேற்பட்ட ஈச்வரத்தன்மையும் நன்றாக வெளியாகும் இம்மஹோத்ஸவத்தில். திருப்புகாவில் வெகு மெதுவாகத்தான் எழுந்தருளுவர். ஸ்ரீபாதம் தாங்குவோர் மிகக்களைத்துப்போய்விடுவார்களாதலால் ஆறுநாட்கள் உத்ஸவ அலுப்பும் அன்றிரவின் நெடுநாழிகையும் ஸேவார்த்திகளையும் சற்றே அயர்த்திவிடும்.

(தொடரும்)

ஸ்ரீ:

த்ருவ சரித்ரம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

வஸிஷ்ட முனிவர் :—குழந்தாய்! விஷ்ணுபகவானை ஆராதநம் செய்வையாகில், இதுவரையிலுமில்லாத நூதனமான ஸ்தாநமொன்றை நீ பெற நினைத்தாலும், அதனையும் ஸித்தமாய் அடைவாய். அப்படியிருக்க, முன்னமே ஸ்ருஷ்டிக்கப்பட்டிருக்கிற மூன்று லோகத்துக்குமுட்பட்ட மேலான ஸ்தாநத்தையடைய ஸந்தேஹமென்ன?

இவற்றைக்கேட்டு உள்ளத்திற்பதியவைத்த த்ருவன் மீண்டும் அம்முனிவரர்களைப்பணிந்து, 'பெரியோர்களே! தேவரீர்கள், ஆராதிக்கவேண்டிய எம்பெருமானை அடியேனுக்குத் தெரியும்படி அருளிச்செய்தீர்கள். அவ்வெம்பெருமான் திருவுள்ளமுவந்து திருவருள் பாலிக்கும்படி ஜபிக்கவேண்டிய மந்த்ரத்தையும் அவனை வழிபடும் வகையையும் அடியேனுக்கு உபதேசித்தருளவேண்டும்' என்று வேண்ட, அவர்கள், 'ராஜபுத்ரனே! கவனமாய்க்கேள். எம்பெருமானிடத்தில் பக்தி செய்யவேண்டுமென்கிறவன் முன்னம் பாஹ்ய விஷய அபிலாஷைகளென்னும் பற்றுக்களை அகற்றி, மனத்தை நிர்மலமாகச் செய்துகொண்டு, பின்பு அம்மனத்தை முகுந்தனுடைய சரணாரவிந்தங்களில் நிச்சலமாகச் சேர்த்து, வேறு நினைவில்லாமல் அத்திருவடிகளையே பாவித்துக்கொண்டு, பரிசுத்தனாய் 'வ்யஷ்டி ஸமஷ்டிரூபமாக ப்ரக்ருதியும் புருஷனும் சரீரமாகவுடைய சுத்த ஜ்ஞாநமயனான ஸ்ரீ வாஸுதேவனுக்கு நமஸ்காரம்,' என்ற பொருளையுடையதான மஹாமந்த்ரத்தை ஜபிக்கவேண்டும். உன்னுடைய பிதாமஹனான ஸ்வாயம்புவமனுவானவர் இந்த மஹாமந்த்ரத்தினாலே வாஸுதேவனை உபாஸநம் செய்ததனால், அவன் திருவுள்ளமுவந்து அந்த மனுவுக்கு அவர் விரும்பியபடி மூவுலகத்தும் பெறுதற்கரிய ஐச்வர்யத்தை அருளினான். நீயும் அப்படியே இந்த மஹாமந்த்ரத்தை ஜபித்து ஸர்வேச்வரனை வழிபடு' என்று நியமித்தருளினார்கள்.

நாரதரின் வருகை

இவ்வாறு ஸப்தரிஷிகள் ஏககண்டமாய் உபதேசம் செய்தருளியதை த்ருவன் மகிழ்ச்சியுடன் ஏற்று, அம் முனிவர்கட்கெல்லாம் தண்டன் ஸமர்ப்பித்து 'தந்யனானேன்' என்று நினைத்துக்கொண்டு, அவர்களிடமிருந்து விடைபெற்றுச் சிறிதுதூரம் சென்றான். அவ்வாறு செல்லுகையில் தேவமுனிவரான நாரதர் ஜ்ஞாநக்கண்ணால் யாவுமறிந்தவராய், த்ருவனை நோக்கி, 'பிள்ளாய்! ஸகல ஸம்பத்துக்களும் வாய்ந்தவர் உனது தந்தை. உனக்கு ஒன்றொன்று குறையில்லை. அப்படியிருக்க, நீ உன் க்ருஹத்தைவிட்டுத் தனியே காட்டில் எங்குச்செல்கிறாய்? உற்றாரால் உண்டான அவமானத்தால் மனம்புண்பட்டுப் போந்தனையென்றெண்ணுகிறேன். நீயோ அறியாத விளையாட்டுப்பிள்ளை. இந்த வயதில் அவமாந ஸம்மாநங்கள் உனக்கு எப்படித்தெரியும்? எல்லாச்செயல்களும் பகவத்ஸங்கல்பத்தால் உண்டாகின்றனவென்று அறிந்து மனமகிழ்ந்திருக்கவேண்டும். உன் எண்ணத்தை அறிந்தேன். உனக்கு ஐந்து வயது இன்னும் பூர்த்தியாகவில்லை. நீ அரியபெரிய தவத்தை எங்ஙனம் செய்யப்போகிறாய்? பெண்ணுலாம் சடையானும் பிரமனும் எண்ணிலா ஊழியூழி தவம் செய்தும் காணமாட்டாத பரமன் உனக்கு எப்படிக் காட்சியளிப்பான்? மேலும்: துஷ்டஜந்துக்கள் ஸஞ்சரிக்கும் காடு இது. இவ்விடத்தில் நீ செல்வது சரியன்று; உன் க்ருஹத்துக்கு விரைந்துசெல்' என்றார்.

முனிவர் மொழிந்த மொழிகளைச் செவியேற்ற த்ருவன் அவர் அடிகளில் வணங்கி, 'ஸ்வாமி! தேவரீர் சொல்லிய வார்த்தைகள் ஸுகதுக்கங்களை ஸமமாகப் பாராட்டும் மஹாத்மாக்களுக்கு ஏற்கும். என் சிற்றன்னையின் சொல்லம்புகளால் புண்பட்டு விநயமில்லாமல் தவிக்கும் என் மனத்திற்கு ஏற்கவில்லை. த்ரிலோகத்திலும் மேலானதாயுள்ள ஒரு ஸ்தாநத்தை அடியேன்விரும்புகிறேன். அதற்குரிய

மார்க்கத்தை அடியேனுக்கு க்ருபை பண்ணிக்கூறியருளல்வேண்டும்' என்று ப்ரார்த்தித்தான்.

யாழ்முனிவர் அரசகுமாரனின் கடைப்பிடியை உணர்ந்து மகிழ்ந்து அம்மைந்தனை அன்போடு எடுத்துத் தழுவி குழந்தாய்! உன் தாய் சொன்னபடியே ஷாட்குண்யபரிபூர்ணனான ஸ்ரீ வாஸுதேவனுடைய திருவடியில் மனஸ்ஸைச் செலுத்தித் தவம் புரிந்து ஸித்திபெறுவாய். மதுவென்ற பெயரையுடைய அஸுரனுக்கு வாஸஸ்தானமாயிருந்தபடியினால் மதுவனம் என்ற பெயரையுடையதும், ஸ்ரீ சத்ருக்நாழ்வான் அந்த மதுவின் புத்ரனான லவணாஸுரனை ஸம்ஹரித்து மதுரை என்கிற நகரத்தைச் செய்தருளப்பெற்றதும், எம்பெருமானுடைய ஸாந்நித்யமுள்ளதும், யமுநாநதிதீரத்தில் விளங்குவதுமான மதுவநத்தில் தர்ப்பாஸநத்திலிருந்து கொண்டு பத்துடையடியவர்க்கெளியனான பகவானை த்யானிப்பாய்.

'… … … … … … … … … … … ஓர்
தோன்னெறியை வேண்டுவார் வீழ்கனியுமூழிலையும்
என்னுமிவையே நுகர்ந் துடலம் தாம் வருந்தி
துன்னு மிலைக்குரம்பைத் துஞ்சியும் வெஞ்சுடரோன்
மன்னுமழல்நுகர்ந்தும் வண்டடத்தினுட் கிடந்தும்'
[பெரியதிருமடல் 12, 13, 14]

என்றபடி மநஸ் இந்த்ரியத்வாரா வெளிச்செல்லாமல் நிற்றற்பொருட்டு வ்ரதமிருந்து உணவைச்சுருக்கவேண்டும். கடுங்கோடையில் நெடும்பொழுது கொதிக்கும் தீப்போன்ற வெயிலிலும் ஐந்தீயிலும் நிற்றலும், கார்காலத்தும் பனிக்காலத்தும் மாரியிலும் பனியிலும் நீரிலும் இருந்து, அவற்றால்வரும் துன்பங்களைப் பொறுத்து கந்தமூலபலாதிகளையும், சருகு, வாயு முதலியவற்றையும் பக்ஷித்துக்கொண்டு ப்ராணாயாமத்தால் மூச்சையடக்கி மௌநத்துடன் சாந்தசித்தனாய் எம்பெருமானை த்யானிக்கவேண்டும். இதுவே தவமாம்' என்று சொல்லி அவனுக்கு த்வாதசாக்ஷர மஹாமந்த்ரத்தை உபதேசித்தருளினார். த்ருவன் மிகுந்த பக்திச்ரத்தையுடன் அதை யேற்று, ஸ்ரீ நாரதபகவானை ப்ரதக்ஷிணம் பண்ணி நமஸ்கரித்து மதுவனத்தைநோக்கிச் சென்றான்.

நாரதர் உத்தாநபாதனிடம் செல்லுதல்

பிறகு நாரதமுனிவர் உத்தாநபாத மஹாராஜனைப் பார்க்கக் கருதி அவன் நகரத்திற்குச் சென்றார். அரசன் முனிவரை எதிர்கொண்டு அழைத்து உபசரித்து ஆஸநத்தில் எழுந்தருளச் செய்தான். நாரதர் அவன் மனோநிலையை அறியக் கருதி அவன் முகத்தை உற்று நோக்கினார். அவன் புத்திரனைப் பிரிந்த வருத்தத்தினால் வாட்டத்தோடிருந்ததைப் பார்த்து, 'அரசே! உன் முகவாட்டத்துக்குக் காரணமென்னை? என்ன தீர்க்காலோசனை பண்ணிக்கொண்டிருக்கிறாய்?' என்றலும் அந்த மநுகுமாரன் 'நாரதபகவானே! அழகு அறிவாற்றல்களால் சிறந்த இளங்குமாரனான த்ருவன், தன் மாற்றாந்தாயினால் அவமதிக்கப்பட்டு நாடு துறந்து காடு சென்றான். நான் ஸிம்ஹாஸநத்தில் வீற்றிருந்தபோது ஆசையோடு என் மடியிலேற வந்தான். நான் பெண்வலையிற் சிக்கி அவனைக் கைவிட்டேன். என்னைப்போல் பாதகனும் இவ்வுலகில் உளனோ? இளந்தளிர்போன்ற அவனது மெல்லடிகள் சிவப்பேறிக் கொப்புளங்கொள்ளுமே! பசிதாஹங்களால் அவன் இளைப்பையும் களைப்பையும் கொள்வானே! அநாதனாய்த் தனியே சென்ற என் அருமை மைந்தனைக் காட்டில் விலங்குகள் கொல்லாதொழியுமா?' என்று அநுதாபத்தோடு ப்ரலாபித்தான். அது கேட்ட அந்த மாமுனிவர், 'அப்பா! நான் உன் குமாரனைக் கண்டேன். அவன் உலகம் புகழும் உத்தமனாய் விளங்கப்போகிறான். அவன் பெருமையை அறியாமல் நீ வ்யஸநப்படவேண்டாம். அவனைப் பகவான் காப்பாற்றுவார். ஒருவராலும் செய்தற்சரிய தவத்தை நின் புதல்வன் செய்துமுடித்து விரைவில் வருவான். கவலையொழி' என்றார். அரசன், தேற்றவும் தேறானாய் அவனையே சிந்தித்துக்கொண்டு கவலைக்கடலில் மூழ்கியிருந்தான். இதுநிற்க.

த்ருவனுடைய கடுந்தவம்.

த்ருவன் தவம் செய்வதற்காக மதுவனம் என்கிற புண்யக்ஷேத்ரத்தை யடைந்து

முனிவர்கள் உபதேசித்தமுறைப்படி தேவாதி தேவனை நாராயணனைத் தனது ஹ்ருதய கமலத்தில் த்யானித்துக் கடுந்தவம் செய்யலானான். இப்படி ஒரு நினைவாய் த்யாநம் செய்துகொண்டிருந்த த்ருவனுடைய சித்தத்தில் ஸர்வபூதங்களிலும் உள்ள எம்பெருமான் அதிப்ரகாசமாகத்தோன்றியருளினான். இந்தப் பரமயோகியான த்ருவனுடைய ஹ்ருதயத்தில் எம்பெருமான் எழுந்தருளியிருந்தபடியினாலே, எல்லாப்பொருள்களையும் தாங்குகின்ற பூமிதேவி அந்த யோகீந்த்ரனைத் தரிக்க மாட்டாதவளானாள். அவன் பூமியை இடக்காலாலே ஊன்றி நிற்கையில் பூமி இடதுபக்கம் தாழ்ந்தது. அவன் வலக்காலாலே ஊன்றி நிற்கையில் பூமி வலப்பக்கம் தாழ்ந்துநின்றது. அந்த யோகி ஒரே பாதத்தின் கட்டை விரலாலே பூமியில் நின்றபோது பூமண்டலமானது நடுநடுங்கிற்று. நதிகளும் நதங்களும் கடல்களும் கலங்கிப்போயின. இவ்வாறு உலகம் கலக்கமுற்றதைக்கண்டு தேவர்கள் சித்தங்கலங்கி இந்த்ரனுடனே ஆலோசனை செய்து, த்ருவனுடைய தவத்தைக் கலைக்க வேண்டுமென்று முயன்றார்கள்.

தேவர்கள் செய்த சூழ்ச்சி

அப்போது தேவேந்தரனுடைய கட்டளையால் விகாரரூபமுள்ள பயங்கரமான கூச்மாண்டங்கள் என்ற பூதவிசேஷங்கள் த்ருவனுடைய த்யாநத்தைக் கலைக்கும்படி வந்து சூழ்ந்து பற்பல மாயங்கள் செய்தன. அவைகளில் ஒரு பூதம், அவனுக்குத் தாயான ஸுநீதியின் ஸ்வரூபத்தை மாயையால் எடுத்துக்கொண்டு அவன் எதிரில் வந்து 'அப்பா! குழந்தாய்' என்று இரக்கமான குரலோடு கூப்பிட்டுக்கொண்டு கூறுகிறது—குழந்தாய்! இக்கொடிய தவத்தால் உன் உடல் கெடுகின்றதேயன்றி, வேறு பலனில்லை. இந்தத் தவத்தை இவ்வளவோடு நிறுத்து. ஐயோ! மகனே! பல நோன்புகள் நோற்று உன்னைப் பெற்றேனே! என் ஆசையைக் கெடுத்து அநாதையும் பேதையுமான என்னைத் தனியே அலையவிட்டு, சக்களத்தித்தாய் சொன்ன பேச்சினாலே நீ இப்படிக் காட்டுக்குவருவது ந்யாயமாகுமா? குமாரா! கதியில்லாத எனக்கு நீயன்றோ கதி! ஐந்து வயதுள்ளவனான நீ எங்கே? மிகவும் கடினமான இத்தவமெங்கே? நிஷ்பலமான இந்த ப்ரயாஸத்திலிருந்து மனத்தைத் திருப்பு. அப்பனே! இது உனக்கு விளையாடுகிறகாலமாயிற்றே. இதற்குப் பின் வேதசாஸ்த்ரங்களை ஓதுங்காலம். அதற்குப் பிறகன்றோ தவஞ்செய்தற்குரிய காலம்! விளையாடும் வயதில் வருத்தத்தைத் தரும் தவத்தைச் செய்தல் தக்கதன்று. என் வார்த்தையைக் கேட்டு எனக்கு ஸந்தோஷத்தைத் தருவதன்றோ உனக்குத் தர்மம்? இந்த அதர்மமான கார்யத்தைச் செய்யாதே. தவத்தை நிறுத்து. கண்மணி! நான் எவ்வளவு சொல்லியுங் கேளாமலிருக்கிறாய். இனி இந்தத் தவத்தை விடாமற்போனையேயானால், இதோ பார், உன் எதிரிலேயே ப்ராணனை விடுகிறேன்' என்று கதறியழுதுகொண்டு நின்றது மாயாஸுநீதி. அதைத் தன் கண் முன்னே கண்டும், த்ருவன் 'கண்ணன் கழலிணை நண்ணும் மனமுடையனாதலால் அதைக்காணாதவனாகவேயிருந்தான். தான் செய்த முயற்சி பயன்படாமை கண்டு மாயாஸுநீதியும் மறைந்துவிட்டது.

அப்பால் மாயையால் அநேக ராக்ஷஸர்கள் தீச்சொரியும் முகமுள்ளவர்களாய்ப் பலவித ஆயுதங்களைக் கைகளில் ஏந்தி அட்டஹாஸம் செய்துகொண்டு 'இந்தப் பயலை குத்துங்கள், வெட்டுங்கள், கொல்லுங்கள், தின்னுங்கள்' என்று ஆர்ப்பரித்துப் பயமுறுத்தினார்கள். அவன் எம்பெருமானுடைய ஶரணாரவிந்தங்களில் லயப்பட்ட மனமுடையவனாயிருந்தமையால், மாயத்தோற்றமுள்ள நிசாசரர்களும் அவர்களுடைய ஆயுதங்களும் அவனை ஊறு செய்யமாட்டாதொழிந்தன. அவன் இவைகளை கவனிக்காமல் ஸ்திரசித்தத்துடனே ஸ்ரீ வாஸுதேவனைத் தனக்குள் எழுந்தருளியிருப்பவனாக த்யானித்துக்கொண்டு மற்றொன்றும் அறியாமலிருந்தான்.

(தொடரும்)

ஸ்ரீ:

இயேஷ பதப்ரயோஜநம்

ஸ்ரீ ரங்கநாத பாதுகாஸஹஸ்ரத்தில் ஸஞ்சாரபத்ததியில்—

'𑌅𑌗𑍍𑌰𑌤𑌸𑍍𑌤𑍇 𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌮𑍃𑌦𑍍𑌨𑌨𑍍𑌤𑍀 𑌕𑍁𑌶𑌕𑌣𑍍𑌟𑌕𑌾𑌨𑍍 । 𑌇𑌤𑌿 𑌸𑍀𑌤𑌾𑌽𑌪𑌿 𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌮𑍈𑌚𑍍𑌛𑌤𑍍 𑌪𑍍𑌰𑌣𑌮𑌾𑌮𑌿 𑌤𑌾𑌮𑍍 ॥'

என்பது முதல் ச்லோகம்.

நான் தர்ப்பங்களாகிற முட்களை நசுக்கிக் கொண்டு உமக்குமுன் போகப்போகிறேன் என்று ஸீதையும் எந்த பாதுகையின் வ்யாபாரத்தை விரும்பினளோ அப்பாதுகையை வணங்குகிறேன் என்று இந்த ச்லோகத்தின் அர்த்தம். இந்த ச்லோகத்தின் முன்பாதி ஸ்ரீமத்ராமாயணம் அயோத்யாகாண்டம் 27-வது ஸர்க்கம்.

'𑌯𑌦𑌿 𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌸𑍍𑌥𑌿𑌤𑍋 𑌦𑍁𑌰𑍍𑌗𑌂 𑌵𑌨𑌮𑌦𑍍𑌯𑍈𑌵 𑌰𑌾𑌘𑌵 । 𑌅𑌗𑍍𑌰𑌤𑌸𑍍𑌤𑍇 𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌮𑍃𑌦𑍍𑌨𑌨𑍍𑌤𑍀 𑌕𑍁𑌶𑌕𑌣𑍍𑌟𑌕𑌾𑌨𑍍 ॥'

என்கிற ஸீதாவசநமான ச்லோகத்தில் பின்பாதியாகவிருக்கிறது. இவ்விடத்தில் 'ஐச்சத்' செய்தாளோ என்றருளிச்செய்யாமல் இயேஷ-விரும்பினளோ என்றருளிச்செய்ததிற்கு காரணம் ராமனின் நியமனத்தால் ஸீதையின் சொல் நிறைவேறாமல் அவளுடைய விருப்பமாகவே முடிந்தது என்பதே. அயோத்யா காண்டம் 52-வது ஸர்க்கத்தில்—

'𑌅𑌗𑍍𑌰𑌤𑍋 𑌗𑌚𑍍𑌛 𑌸𑍌𑌮𑌿𑌤𑍍𑌰𑍇 𑌸𑍀𑌤𑌾 𑌤𑍍𑌵𑌾-𑌮𑌨𑍁𑌗𑌚𑍍𑌛𑌤𑍁 । 𑌪𑍃𑌷𑍍𑌠𑌤𑍋𑌽𑌹𑌂 𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌚 𑌸𑍀𑌤𑌾𑌂 𑌚 𑌪𑌾𑌲𑌯𑌨𑍍 ।...........

𑌅𑌦𑍍𑌯 𑌦𑍁𑌃𑌖𑌂 𑌤𑍁 𑌵𑍈𑌦𑍇𑌹𑍀 𑌵𑌨-𑌵𑌾𑌸𑌸𑍍𑌯 𑌵𑍇𑌤𑍍𑌸𑍍𑌯𑌤𑌿 । 𑌪𑍍𑌰𑌣𑌷𑍍𑌟𑌜𑌨𑌸𑌂𑌬𑌾𑌧𑌂 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌾𑌰𑌾𑌮𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌮𑍍 ॥

𑌵𑌿𑌷𑌮𑌂 𑌚 𑌪𑍍𑌰𑌪𑌾𑌤𑌂 𑌚 𑌵𑌨𑌮𑌦𑍍𑌯 𑌪𑍍𑌰𑌵𑍇𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿 । 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌵𑌚𑌨𑌂 𑌪𑍍𑌰𑌤𑌸𑍍𑌥𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑍋𑌽𑌗𑍍𑌰𑌤𑌃 ॥ 𑌅𑌨𑌨𑍍𑌤𑌰𑌂 𑌚 𑌸𑍀𑌤𑌾𑌯𑌾 𑌰𑌾𑌘𑌵𑍋 𑌰𑌘𑍁𑌨𑌨𑍍𑌦𑌨𑌃 ।'

என்கிற ச்லோகங்களில் கானகத்தில் லக்ஷ்மணன் ஸீதை ராமன் இவர்களுக்கு முறையே பாதஸஞ்சாரம் முதலாவதாகச் சொல்லப்படுகிறது. 55-வது ஸர்க்கத்தில்

'𑌸𑍀𑌤𑌾𑌮𑌾𑌦𑌾𑌯 𑌗𑌚𑍍𑌛 𑌤𑍍𑌵𑌮𑌗𑍍𑌰𑌤𑍋 𑌭𑌰𑌤𑌾-𑌗𑍍𑌰𑌜 । 𑌪𑍃𑌷𑍍𑌠𑌤𑍋𑌽𑌹𑌂 𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌸𑌾-𑌯𑍁𑌧𑍋 𑌦𑍍𑌵𑌿𑌪𑌦𑌾𑌂 𑌵𑌰 ॥..................

𑌗𑌚𑍍𑌛𑌤𑍋𑌸𑍍𑌤𑍁 𑌤𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌬𑌭𑍂𑌵 𑌜𑌨𑌕𑌾𑌤𑍍𑌮𑌜𑌾 । 𑌮𑌾𑌤𑌙𑍍𑌗𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑌗𑌤𑌾 𑌶𑍁𑌭𑌾 𑌨𑌾𑌗𑌵𑌧𑍂𑌰𑌿𑌵 ॥'

என்கிற ச்லோகங்களிலும் முன்போலவே லக்ஷ்மணன் ஸீதை ராமன் சென்றதாக ஏற்படுகிறது. 102-வது ஸர்க்கத்தில்

'𑌸𑍀𑌤𑌾 𑌪𑍁𑌰𑌸𑍍𑌤𑌾𑌦𑍍𑌵𑍍𑌰𑌜𑌤𑍁 𑌤𑍍𑌵𑌮𑍇𑌨𑌾𑌮𑌭𑌿𑌤𑍋 𑌵𑍍𑌰𑌜 । 𑌅𑌹𑌂 𑌪𑌶𑍍𑌚𑌾𑌦𑍍𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌗𑌤𑌿𑌰𑍍𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌸𑍁𑌦𑌾𑌰𑍁𑌣𑌾 ॥'

என்கிற ச்லோகத்தில் தசரதமரணத்தைக் கேட்டு ஸ்நாநம் முதலிய காரியத்திற்காகச் செல்லும்போது பித்ருமேதஸூத்ரத்தை அநுஸரித்து முதலில் ஸீதையும் பிறகு லக்ஷ்மணனும் பின்பு ராமனும் சென்றதாகத் தெரிகிறது. ஆரண்யகாண்டம் 11-வது ஸர்க்கத்தில்

'𑌅𑌗𑍍𑌰𑌤𑌃 𑌪𑍍𑌰𑌯𑌯𑍌 𑌰𑌾𑌮𑌃 𑌸𑍀𑌤𑌾 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑍁𑌮𑌧𑍍𑌯𑌮𑌾 । 𑌪𑍃𑌷𑍍𑌠𑌤𑌸𑍍𑌤𑍁 𑌧𑌨𑍁𑌷𑍍𑌪𑌾𑌣𑌿𑌰𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑍋𑌽𑌨𑍁𑌜𑌗𑌾𑌮 𑌹 ॥'

என்கிற முதல் ச்லோகத்தில் முதலில் ராமனும் பிறகு ஸதையும் அதற்குப்பின் லக்ஷ்மணனும் போனதாகச் சொல்லப்படுகிறது. இவ்விடத்தில் ப்ரணவத்தின் அர்த்தமும் ப்ரகாசிப்பிக்கப்படுகிறது. பிறகு ராவணன் ஸீதையை லங்கைக்குக் கொண்டுபோனதாலும் ராவணவதமானபிறகு ஸீதை புஷ்பகவிமானத்திலேறி அயோத்யைக்கும் அயோத்யையிலிருந்து லக்ஷ்மணனுடன் ரதத்திலேறி காட்டிற்கும் போனதாலும் ஸீதைக்கு ராமனுடன் காட்டில் பாதஸஞ்சாரத்திற்கு ப்ரஸக்தியேயில்லை.

சுந்தரகாண்டம் 33-வது ஸர்க்கத்தில் ‘ஸாஹம் தஸ்யாக்ரதஸ்தூர்ணம் ப்ரஸ்தி-தா வநவாஸிநீ’ என்று ஸீதை சொன்னது ‘அக்ரதஸ்தே கமிஷ்யாமி ம்ருத்நந்தீ குசகண்-டகாந்’ என்று சொன்னதுபோலவே. ஸீதை சொல்படி நிறைவேறுததாலேயே திலகவ்யாக்யாநத்தில் ‘யதி த்வம்’ என்கிற ப்ரதீகத்தை எடுத்துக்கொண்டு ‘ம்ருத்நந்தீ குசகண்டகாந் பத்ப்யாமேவ கமிஷ்யாமீதி ந ச தே ச்ரமம் த்ராஸ்யாமீதி ச த்வநிதம்’ என்கிற வாக்யத்தால் ஸீதையின் சொல் கால்களாலேயே போகப்போகிறேன் என்கிற அர்த்தத்தில் முடிவடைந்ததாகச் சொல்லப்பட்டது. ஆகையால் ஸீதை கானகத்தில் குசமர்த்தனம் செய்துகொண்டு ராமனுக்கு முன் போகப் போவதாக சொன்னதால் பாதுகைகளுக்கு குசமர்த்தனமில்லாததால் ராமன் பாதுகைகளை தரிக்காமலே அயோத்தியிலிருந்து சித்ரகூடத்திற்கு எழுந்தருளினுர் என்று சொல்லுவது ஸரியன்று. சிலவிடத்தில் லக்ஷ்மணனும் சிலவிடத்தில் தானும் ஸீதைக்குமுன் காட்டில் போகவேணும் என்பதல்லவோ ராமன் திருவுள்ளம். அயோத்தியிலிருந்து சித்ரகூடம் வரையில் பாதுகைகளை தரிக்காமல் போனுல் அவைகளுக்கு குசமர்த்தநமில்லாததால் அதை பாதுகாவ்யாபாரமாகக் கருதி அதை ஸீதை விரும்பினதாக அருளிச்செய்தது அநுபபந்நமாகும்.

குசமர்த்தனம் பாதுகாவ்யாபாரம் என்று ஸாதித்ததாலும் ஸ்ரீமத்ராமாயணத்தில் ராமனைப்பார்த்து ‘உம்முடைய பாதுகைகள்’ என்றும் வேறிடத்தில் ‘ராமனுடைய பாதுகைகள்’ என்றும் அவரவர்கள் வ்யவஹரித்ததாகவும், பரதனுக்கு ராஜ்யத்தைப்போல் பாதுகைகளை ந்யாஸரூபமாக (இன்னொரு ஸமயத்தில் திரும்பி பெற்றுக்கொள்வதற்காக நம்பிக்கையுள்ள மனுஷ்யனிடத்தில் காப்பாற்றிவைக்கும்படி ஒரு வஸ்துவை கொடுத்துவைப்பது) ராமன் கொடுத்ததாகவும், பரதன் நந்திக்ராமத்தில் திரும்பி எழுந்தருளின ராமன் திருவடிகளில் அவரால் தன்னிடத்தில் ந்யாஸரூபமாக வைக்கப்பட்ட பாதுகைகளை ஸமர்ப்பித்ததாகவும் சொல்லியிருப்பதாலும் சக்ரவர்த்தித் திருமகன், ஸ்நாநகர்மப்ரகரணத்தில் சொன்னபடி மந்த்ரபூர்வகமாகதரித்த தங்கபாதுகைகளை அயோத்தியிலிருந்து புறப்படும்போது பரிஹரிப்பது அநுசிதமானதாலும், பிற்பட்டு பரதப்ரார்த்தநையின்பேரில் பரதனுக்கு அவைகளைக் கொடுப்பது ந்யாய்யமானதாலும் சித்ரகூடத்திற்குமேல் ராமனுக்கு பூமியில் பாதஸ்பர்சம் ஏற்பட்டபோதுண்டான பாதங்களின் வேதனையை குலசேகராழ்வார் ஸ்ரீஸூக்தி வர்ணிப்பதாகச் சொல்லிவிடலாமதலாலும், சித்ரகூடத்தில் லக்ஷ்மணன் பாதுகைகளாக அவதரித்ததாகச் சொல்லுவது ராமாயணத்தில் சொல்லப்படாததாலும், ‘ஶூத்ராநம் ஶாநுஷம் ஶேஷ்ய’ என்கிறபடி மனுஷ்யாபிநயம்செய்யும் ராமன்போல் மனுஷ்யாபிநயம்செய்யும் லக்ஷ்மணன் பாதுகைகளாக அவதாரம் செய்தார் என்று சொல்லுவது ராமாயணத்திற்கு விருத்தமாதலாலும் வ்யாக்யாதா ஒருவரும் லக்ஷ்மணன் பாதுகைகளாக அவதரித்ததாகச் சொல்லாததாலும், ராமனை எப்படியாவது திருப்பி அழைத்துக்கொண்டு வந்து பட்டாபிஷேகம் செய்யவேண்டுமென்று த்ருடஸங்கல்பமுள்ள பரதன் பாதுகைகளைத் தான் நிர்மாணம் செய்து அவைகளுக்குப் பட்டாபிஷேகம்செய்ய அவைகளுடன் சென்றுரென்று சொல்லுவதும், தசரதர் ஸம்பாதித்த அபிஷேகஸம்பாரத்தில் பாதுகைகள் அடங்கியிருப்பதாக ஸ்ரீமத்ராமாயணத்தில் சொல்லாமலிருக்க அதில் அவைகளிருந்ததாகவைத்து சித்ரகூடத்தில் ராமன் திருவடிகளில் அவைகளை ஸமர்ப்பித்து பரதன் வாங்கிக்கொண்டதாகச் சொல்லுவதும் ஸ்ரீமத்ராமாயணம் அதின் வ்யாக்யாநங்கள் பாதுகாஸஹஸ்ரம் அதின் வ்யாக்யாநங்கள் அபயப்ரதாநஸாரம் அதில் உதாஹரித்த ‘மரவடியை தம்பிக்கு வான் பணையம் வைத்துப்போய் வானேர்வாழ’ என்கிற பாதுகாந்யாஸவிஷயமான ஆழ்வார் ஸ்ரீஸூக்தி, இவை முதலியவைகளுக்கும், மஹான்களுடைய அபிப்ராயத்திற்கும் விருத்தமாதலாலும் ஸ்ரீராமன் அயோத்தியிலிருந்து தரித்துக்கொண்டுபோன பாதுகைகளை சித்ரகூடத்தில் பரதனது ப்ரார்த்தனையின்பேரில் அவருக்குக்கொடுத்ததாகச்சொல்வதே உசிதம். ‘குடையும் செருப்பும் கொடாதே’ என்கிற

ஆழ்வார் ஸ்ரீஸூக்தியால் பாதுகைகளுக்கு ஸஞ்சாரகாலத்தில் உபயோகமிருப்பதாக ஏற் படுவதால் 'நின்றால் மரவடியாம்' என்கிற விடத்தில் பகவானுக்கு இன்னது செய்வ தென்பது புரியாதிருக்கும் நிலைமையில் ஸஞ் சாரமில்லாதஸமயத்தில் சேஷன் பாதுகையாக அவதரிப்பதாக அர்த்தவர்ணநம் செய்வது உசிதமன்று. 'நின்றால் மரவடியாம்' என்கிற தற்கு இம்மாதிரியாக பூர்வாசார்யர்கள் ஒரு வரும் வ்யாக்யாநம் செய்யவில்லை. பாதுகா ஸஹஸ்ரத்தில் உல்லேகம் முதலியதுகள்விசேஷ மாயிருப்பதால் அதில் சொன்ன எல்லா அர்த்தங்களும் அஸத்யங்களென்று சொன் னால் ஸ்ரீமத்ராமாயணத்திலும் உல்லேகம் முதலியதுகள் நிறைந்திருப்பதால் அதிலும் இந்த தோஷம் ப்ரஸங்கிக்கும். கீழ்ச்சொன்ன உபபத்திகளாலே பாதுகைகளுக்கு ஸஞ்சாரம் ப்ராமாணிகமாக ஏற்படுவதால் அதை கர்மா வாக நிர்த்தேசித்து ராமனுடைய நியமனத் தால் ஸீதையின் சொல்லானது நிறைவேறா மல் கேவலம் மனோரதமாக முடிந்ததால் 'இயேஷ' என்று ஸ்ரீதேசிகன் அருளிச்செய் தார். இவ்விஷயம் சென்ற மார்கழிமாத ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவில் வெளியான 'ஸ்ரீராம னின் பாதுகைகள்' என்கிறவ்யாஸத்தில் விரி வாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. பிறகும் நிரூ பிக்கப்படும்.

ஸ்ரீ:

ஆழ்வார் ஆசார்யர்களின் அவதாரம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

பகவான் நம்மாழ்வாருக்கு எப்படி பலம் தரக்கால்தாழ்ந்தானோ அதுபோல் ஆண்டாள் பக்கலிலும் இவளையிட்டு லோகத்தின் க்ஷேமத் திற்காக சில காரியங்கள் செய்யத் திருவுள்ளம் பற்றியிருந்ததால் இவள் ஶரணாகதிக்கு சடக் கெனப் பலம் கொடுத்தானில்லை. பலம் வரக் கால்தாழ்க்கவே இவள் ஆர்த்தி அதிகமாயிற்று. மேலே இந்த பலத்தையடைய மறுபடியும் யத்தநிக்கிறாள். இப்போதுதான் இவளுடைய இரண்டாவது ப்ரபந்தமாகிய **நாச்சியார் திருமொழி** அவதரிக்கிறது. இது நூற்று நாற்பத்திமூன்று பாசுரங்களடங்கியது. இதில் எம்பெருமான் விஷயத்தில் இவளுக்குண்டான கரைபுரண்ட காதல் படிப்படியாக வளர்ந்து மண்திணிஞாலமும் ஏழ்கடலும் நீள்விசும்பும் கழியப்பெரிதாகி முடிவில் எம்பெருமானை யடைந்து முடிவுபெறுகிறது. ஆழ்வார்களின் அதிசயிதபக்தியானது ச்ருங்காரவ்ருத்தியாக மாறி எம்பெருமானிடம்சென்றது. இவளது பக்தியும் அதேமாதிரி ச்ருங்காரவ்ருத்தியாக மாறி எம்பெருமானிடத்துச் சென்றாலும் இவளநுபவம் தன்னேற்றம் பெற்றிருக்கும். ஏனெனில்—புருஷன் ஸ்த்ரீயாக மாறி அநுப விப்பதைக்காட்டிலும் ஸ்த்ரீ தன்னடையே அநுபவிப்பது பள்ளமடையாகையால் இவ ளநுபவம் விஞ்சியிருக்கக் குறையில்லையிறே. இதை ஓரிடத்தில் அநுபவிப்போம். ப்ரணய கலஹகாலங்களில் ஆழ்வார்களின் ஹாவகர்ப்பங்க ளான இசைவுகள் 'ஒரு நான்று தடிபிணக்கே' 'பந்தும் கழலும் தந்துபோகு நம்பி' என்றிப் படி கடினமாகவிருக்கும். இவள் வார்த்தை களை ஆராயப்புக்கால் 'எம்மைப்பற்றி மெய்ப் பிணக்கிட்டால் இந்தப்பக்கம் நின்றவரென் சொல்லார்' 'எம்மனைமார் காணிலொட்டார்' என்றிப்படி ஸம்ச்லேஷத்திலுண்டான இசைவை மார்த்தவம் தோன்றச்சொல்லுவள்.

இப்படி எம்பெருமானை ஆண்டாள் தன் திருவுள்ளத்தாலே அநுபவித்து அவ்வநுபவ ஜநித நிரவதிக ப்ரீதியாலே தான் அநுபவித்த படியே பேசுகிற இந்த ப்ரபந்தத்தில் முதலாவ தாகத் தன் மநோரதம் கைகூடுவதற்கு காமன் காலில் விழுகிறாள். உன்னித்து மற்றொரு தெய்வம் தொழாள் அவனையல்லால் என்கிற ப்ரக்ருதியாகையாலும் 'மற்றுமோர் தெய்வம் உளதென்றிருப்பாரோடுற்றிலேன் உற்ற தும் உன் அடியார்க்கடிமை' என்கிறபடி மறந்தும் புறந்தொழாதவளாகையாலும், பெரியாழ்வார் வயிற்றில் பிறவியைப் பெற்றவ

ளாகையாலும் இவள் ஒருகாலும் காமன் காலில் விழாள். ஆகையால் இங்கு காமன் என்பது 'க்ருஷ்ண வாணஸ்வரூபிணி' என்கிறபடி க்ருஷ்ணனின் ரூபமே. அவன் முகம்கொடுக்கக் கால்தாழ்ந்தாலும் 'உன் சரணல்லால் சரணில்லை' என்றும் களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன்' என்றும் 'பிராணஸ்ய ஸவிதா தாவத் ஸ்ரூமாந்ஸ! ஹாதாம் தவ பாத வஹஜ்ஜு' என்றும் சொல்லுகிறபடி அவனன்றி வேறே புகல் இவளுக்கில்லையிறே. ஆகையால் மறுபடியும் கண்ணன் திருவடிகளிலேயே விழுகிறாள். ஸ்ரீஸ்வாமி தேசிகன் பரமத பங்கத்தில் அருளிய நிர்வாஹமிது. கேசவ நம்பியைக் கால்பிடிக்கக் க்ருபைபண்ணவேணும் என்று அவனையே கால்பிடிக்கிறாள். அவனடி வருட அவனடிதானே உபாயம். பிறகு இப் புருஷார்த்தம் நமக்குக் கைகூடுமா என்று சகுனம் பார்ப்பதும், தன் கிளி, ஆழியும் சங்கும் ஒண்தண்டும் தங்கிய திருமாலைப் பாடக்கேட்டு சற்று தரிப்பதும், அரிமுகன் அச்சுதன் கைமேல் தன் கைவைத்து இந்திர னுள்ளிட்ட தேவர் குழாமெல்லாம் சூழ வாய் நல்லார் நல்ல மறையோதத் தான் தீவலம் வருவதாகக் கனாக்கண்டு சற்று தரிப்பதும், வேங்கடத்துத் தெண்ணீர் பாயப்போகும் மேகங்களை திருவேங்கடத்தானிடத்து தூது விட்டு சற்று தரிப்பதும் செய்து இப்படியாக இவள் காதல் வ்ருத்தியடைந்து கடைசியில் 'உள்ளே யுருகிநைவேனை உளளோ இலளோ வென்னாத கொள்ளை கொள்ளிக்குறும்பனைக் கோவர்த்தனனைக் கண்டக்கால் கொள்ளும் பயனொன்றில்லாத கொங்கைதன்னைக் கிழங் கொடும் அள்ளிப்பறித்திட்டு அவன் மார்பி லெறிந்தென்னழலைத் தீர்வேனே' என்கிறபடி அவனுக்கென்று ஆதரித்து எழுந்த தன் தடமுலைகள் அவனுக்குறுப்படாவிடில் அவை களைக் கிழங்கொடும் பறித்து அவன் மார்பில் எறிந்து அவைகள் அவன் மார்பில் முளைத் தெழுந்து அவன் ஸ்த்ரீயாக மாறி தான் படும் அவஸ்தைகளெல்லாம் அவன் பட நேரிட வேண்டுமென்று அறுதியிடவேண்டியவளவிற்கு வந்தவுடன் எம்பெருமானும் இனிக் கால்தாழ்த் தால் ஆண்டாளின் ஸத்தைக்கு ஹாநி ஏற்படும் என்று அஞ்சி பீதகவாடையுடை தாழப் பெருங் கார்மேகக் கன்றேபோல் வீதியார விருந்தாவனத்தே ஸேவைஸாதித்தான். இப் படிப் பருந்தாள்களிற்றுக் கருள்செய்த பரமன் தன்னை விருந்தாவனத்தே ஆண்டாள் ஸேவித்துத் தன்னுடைய அவாவெல்லாம் அற்றவளாகி பரிபூர்ண ப்ரஹ்மாநுபவத்தை யெய்தினாள்—என்று இப் ப்ரபந்தம் தலைக் கட்டுகிறது.

இவள் திருவவதார உற்சவமும் இவள் ஸாதித்த திருப்பாவை என்கிற திவ்யப்ரபந் தத்தின் உற்சவமும் இரண்டும் இரண்டு திருக் கல்யாணமஹோத்ஸவங்களாக சூந்யமாதங்களில் கொண்டாடப்படுகின்றன. எப்படி ஸர்வஸ்மாத்பரனான ஸர்வேச்வரன் பிறவியால் அறிவொன்றுமில்லாத ஆயர்குலத்தவர் வாழும் ஆய்ப்பாடியும் உயர்ந்ததாகி மஹரிஷிகளும் படுகாடுகிடக்கும்படியாயிற்றோ அதுபோல் 'தக்ஷிணாபி வஸிஷ்டிர் வேண்யமஹோஸ ஸவித்ரா தாரா ஹவதி ஷேவி தவாவதாராக' என்கிறபடி ஆண்டாளின் அவதாரத்தாலும் திருப்பாவை உற்சவகொண்டாட்டத்தாலும் அருளாளன் தலையால் வணங்கி ஸ்வீகரிக்கும் ஆண்டாளின் பூமாலையோடும் பாமாலை யோடும் வாசியற அவள் பிறந்த திக்கும் இந்த சூந்யமாதங்களிரண்டும் உயர்ந்ததாகியது கள். ஆண்டாளின் திருக்கல்யாணத்திற் கென்றே 'ஜ்யேஷ்டாபிஷேக உத்ஸவ காலத்தில் புறப்பாடு ஒன்றும் கண்டருளுவ தில்லை' என்கிற ஸங்கல்பத்தைமாற்றிக்கொண்டு திருமலையில் நின்றும் கீழிறங்கி மஹோற்சவம் கண்டருளுகிறான் தேவாதிதேவன். இவ்வளவு வால்லப்யம் எம்பெருமானிடத்து இவளுக் கிருப்பதால்தான் நம்முடைய ரக்ஷணத்திற்கு இவள் ஸாந்நித்யம் அவசியம் என்று திரு வுள்ளம்பற்றி ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் 'க்ஷுத்ரா வராயிதி ஜநே.........வாஸ்யே வாது ஹவதீ யதி தது நாஸீக............வஷம் வரிவசித்தம் ஸ்யாஸ' என்று ஸாதிக்கிறார். இப்படி ஆண்டாள் தன்னுடைய திவ்யப்ரபந் தங்களாலே நமக்கு மஹோபகாரம் பண்ணி

பிருக்கிறபடியால்தான் மற்றைய ஆழ்வார்களின் திருநக்ஷத்ரமஹோத்ஸவங்களைக் காட்டிலும் இன்றும் திருவாடிப்பூரமும் போகியும் பெரிய பண்டிகைகளாக எங்கும் கொண்டாடப்பட்டுவருகின்றன. இவள்திறத்து நாம் ப்ரார்த்திக்கவேண்டுவது என்னென்னில்—

‚ஶதவேணீநீரா வாரங்கோஹாரஹலா
ஷநஹாரநதீதாஜீ ஸாந்த்ரவாஸ்த்வ்யவிஸங்க:
சுஜகவிநிஹிதாஹி:ஸ்ரீராகச்ரஷ்நாயா
விஶஸத ஹ்ருதி மொதா விஷ்ணுவித்தாத்மஜா
ஜாந:॥’ என்கிறபடி என்றைக்கும் நம்முடைய ஹ்ருதயத்தில் கோதையானவள் வஸிக்கவேண்டுமென்பதே.

வேயர்புகழ் வில்லிபுத்தூர் ஆடிப்பூரம்
மேன்மேலும் மிகவிளங்க விட்டுசித்தன்
தூயதிருமகளாய் வந்தரங்கனுர்க்குத்
துழாய்மாலைமுடிசூடிக் கொடுத்தமாதே
நேயமுடன் திருப்பாவை பாட்டாறைந்தும்
நீயுரைத்த தையொருதிங்கள்பாமாலை
ஆய புகழ் நூற்றுநாற்பத்துமூன்றும்
அன்புடனே அடியேனுக்கருள்செய்நீயே
[ப்ரபந்தஸாரம்-10]

(தொடரும்)

ஸ்ரீ:

தேசிக வைபவ நாடகத் தமிழ்க்கவி

‘தேசிகனென்னு மாசான்’ ‘பேசுபய வேதாந்ததேசிகன்’ என்றிவ்வாறு நற்றமிழரால் அன்றுதொட்டு இன்றளவும் நம் தூப்புற் குலமணி கொண்டாடப்பெற்றுவந்துள்ளார்.

‘வடிவழகார்ந்த வண்தூப்புல் வள்ளல்மென்
மலரடிமேல் அடியவரோத வந்தாதியிருபது
மாய்ந்துரைத்தேன்’ (20)

என்று தாமே அருளியபடி குமாரநயினாராசார்யர் சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் விஷயமான பிள்ளையந்தாதி பாடியுள்ளார். ஸ்ரீ சோளஸிம்ஹபுரம் சண்டமாருதம் தொட்டையாசார்யர் ‚ஸம்ஸ்க்ருத வைபவப்ரகாசிகையும்’ அவர்சிஷ்யரான மஹார்ய தாஸர் என்கிற பெரியப்பங்கார் ‚மணிப்ரவாள வைபவப்ரகாசிகை’யையும் இயற்றியுள்ளனர் என்பது உலகு நன்கறிந்ததே. வயலூர் கந்தாடை மன்னப்பங்கார் வெண்பாவில் ‘தேசிகர் நூற்றந்தாதி’ பாடியுள்ளார். அநுமந்தநகரம் மதுரகவி ஸ்ரீநிவாஸஐயங்கார் ‚வேதாந்ததேசிகன் அடைக்கலப்பத்து’ இசைத்துள்ளார். ‚ஸ்ரீமத்வேதாந்ததேசிகவைபவ ப்ரகாசிகைக் கீர்த்தனே’ என்னும் உயரிய க்ரந்தத்தை மத்திபார்ச்சுனம் அநந்த பாரதகவி யாத்துள்ளார். அதுவே ‚தேசிகவைபவ நாடகத்தமிழ்’ அக்கவியின் வரலாற்றைச் சற்று விவரிக்க முயல்வதே இக்கட்டுரையின் முக்கியநோக்கு. அறிவுடையார் குற்றமகற்றிக் குணமே கொள்வர்.

உயிர்கட்கு ஜீவாதாரமாகவுள்ள பயிர் வளத்துக்குப் பிரதானகாரணமான நாட்டுச்செழிப்பைக் காவேரிப்பாய்ச்சலால் நன்கு பெற்று அந்நீர்வளத்தை மிகுதியாகவுடைமையால் ‘புனனாடு’ என்று புகழுற்றது சோழ நன்னாடு. ‘சோழவளநாடு சோறுடைத்து’ என்பது ஔவைப்பிராட்டியாரின் அமுதமொழி. ‘உண்ணும் சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம், கண்ணன் எம்பெருமான்’ (திருவாய்மொழி 6-7-1) என்ற ஆழ்வார் பாசுரத்தை இங்கு நினைக. ‘ஈரிருபதாஞ் சோழம்’ என்றபடி பிரசித்தமாகவுள்ள நாற்பது திவ்விய தேசங்கள் கங்கையிற் புனிதமான காவிரிநதி புனல்பரந்து பொன் கொழிக்கப் பெற்ற இம்மண்டலத்தில் உள்ளன. ‘கொண்டல் குமுறுங் குடகிழிந்து மதகுந்தியகில்கொண்டு நுரைமண்டி வருநீர்த் தெண்டிரை தொறுந் தரளமுங் கனகமுஞ்’ சிதறுவதும், தன்னில் நீராடியவர்க்கும் தன் கரைகளில் வாழ்பவர்க்கும் மாத்திரமேயன்றித் தனது தீர்த்தத்திற் பரிசுத்தக்காற்றுச்செல்லுமிடமவ்வளவும் உள்ளார்க்கும் முத்திதரவல்ல மகாப்பிரபாவத்தையுடையது பொன்னிநதி என்பது உலகப்பிரசித்தம். எனவே சோழ

நாட்டின் பெருமை அளவிடற்கரியது என்னலாம். 'தண்ணீருங் காவிரியே, தார்வேந்தன் சோழனே, மண்ணாவதுஞ் சோழமண்டலமே' என்று கல்வியிற் பெரிய கம்பநாட்டாழ்வான் போற்றியிருப்பதாலும் எந்நிலத்தினும் நன்னிலம் சோழநாடு என்பது தேற்றம். இந்நாட்டில் திருமங்கையாழ்வாரால் மங்களாசாஸநஞ்செய்யப்பெற்ற பிரபலமான திவ்ய தேசம் 'நாச்சியார் கோயில்' என வழங்கும் திருநறையூர். இத்திருப்பதியின் அருகில் உள்ளது கோவியற்குடி என்ற அக்கிரகாரம். அது இப்பொழுது கோலியக்குடி என்று மருவி வழங்கப்பெற்றுவருகிறது. அச் சிற்றூரில் சிறந்த ஸ்ரீவைஷ்ணவபிராமணரான ஸ்ரீநிவாஸஐயங்கார் என்ற தவச்செல்வர் வாழ்ந்துவந்தார். இவர் ஸாமவேத ஜைமினி ஸூத்ர விசுவாமித்திர கோத்திரத்தில் உற்பவித்தவர். இவர் வேகம்வல்ல முன்குடுமிப் பிராமணர். பாலபாரதி என்கிற இடையாத்தங்குடி நம்பி இயற்றிய இராமஜயத்திருப்புகழ் என்னும் நன்னூலைப் பாராயணஞ்செய்து அதினாற் சக்கரவர்த்தித் திருமகனாகிய ஸ்ரீராமபிரானுடைய பரிபூர்ண கடாக்ஷம் பெற்றவர் இவர். இவரது தருமபத்தினி கற்பினுக்கணியாய் அருந்ததி அனைய லக்ஷ்மி அம்மாள். இம் மங்கையர்க்கரசி சாலிவாகன சகாப்தம் 1707 (கி. பி. 1785) விச்வாவஸு ஆண்டு சித்திரைத்திங்கள் பூர்வபக்ஷம் ஸப்தமி திருவோண நக்ஷத்திரங்கூடிய சுபதினத்தில் ஒரு புதல்வனை ஈன்றாள். அப்பாலகனுக்கு வேதமுறைப்படி ஜாதகர்ம நாமகரண முதலான ஸம்ஸ்காரங்களைச் செய்து அநந்தன் என்ற திருநாமத்தை உவந்து ஓதினர்.

இச்செல்வனது பிறந்தவாறு பின்வருமாறு கேட்கப்பெறுகின்றது. ஸ்ரீநிவாஸஐய்யங்காரும் லக்ஷ்மி அம்மாளும் இல்லறமாகிய நல்லறத்தை ஒரு குறைவின்றி நடத்திவருகையில் நீண்டகாலம் புத்திரப்பேறின்றியிருக்க நேரிட்டது. அநேக தானதருமங்களை விதிப்பிரகாரம் இயற்றியும் குறை நீங்கவில்லை. தம்பதிகள் இருவரும் மனக்கவலையுற்றனர். ஸ்ரீ ஆராவமுதாழ்வான் பிரஹ்மோத்ஸவ ஸேவார்த்தம் திருக்குடந்தைக்கு எழுந்தருளினர் இவர்கள் ஒருநாள். பெருமாளை நன்கு ஸேவித்தனர். தங்களுக்குள்ள மனக்குறையை பகவானிடம் விண்ணப்பம் செய்தனர். அன்று இரவு கோயில் திருக்காப்பிடுகிற பர்யந்தம் அங்கேயேயிருந்து பின்னர் மீண்டு ஸந்நிதி வீதியில் ஒரு ஸ்ரீவைஷ்ணவர் திருமாளிகையில் புறத்திண்ணையில் கவலையுடன் கண்துயின்றனர். அன்றிரவு அடியவர்க்கு ஆராத அருள் அமுதம் பொழியும் அண்ணல் ஸ்ரீ ஆராவமுதன் சிறந்த ஓர் ஸ்ரீவைஷ்ணவத் திருமேனியுடன் அவர்கள் கனவில் எழுந்தருளினர். தம்பதிகளைக் குளிரக்கடாக்ஷித்து 'உங்கள் மனோரதப்படி பரமபாகவதசிகாமணியாகிய ஒரு புதல்வனை நல்கினோம். மக்கட்கவலையுறேல். இதோ திருத்துழாய் பிரஸாதம்' என்று கூறி அளித்து அந்தர்த்தானமாயினன் ஆயிரநாமத்தண்ணல். உடனே கண்விழித்தனர் தம்பதிகள் இருவரும். நித்திரை நீத்தனர். பகவானுடைய சரணாரவிந்த பஜனத்தைக் கங்குல் எல்லை காண்பளவும் செய்தனர். அதிகாலையில் திருக்காவிரியில் தீர்த்தமாடி அமுதனைக்கண்களார ஸேவித்துத் தம்மூர் திரும்பினர். அத்திங்கள்முதல் அய்யங்காரின் தேவியார் பகவத்க்ருபையினாற் கருப்பமுற்று ஈரைந்தாந்திங்களான மேட மாதத்தில் முற்கூறியபடி செல்வனைப்பெற்றாள்.

இவர் குழந்தைப்பிராயத்திலேயே பல கலைகளைக்கற்றுத்தேர்ந்தார். ஐந்தாவதாண்டு இறுதியில் இவரது அன்னையார் ஆசார்யன் திருவடிகளை அடைந்தார். பதின்மூன்றாவது ஆண்டில் ஓரிரவில் இவர் கனவில் அதிபாலையான சுந்தர வடிவுடன் கலைமகள் எழுந்தருளி இவரது நாவில் தம்முடைய பீஜாக்ஷரத்தைப்பொறித்து எழுந்தருளினர். உடனே கண்விழித்து இது சாரதாளுடைய திருவருள் என்று அறிந்து அந்நாமகள் விஷயமாக ஸரஸ்வதி மாலை என்ற ஒரு பிரபந்தம் பாடினர். பதினைந்தாவது வயதில் இவரது தந்தையாரும் பரமபதத்திற்கு எழுந்தருளினர். வடகலை தென்கலை என்ற இரண்டிலும் வல்லவராய்ப் பிரபுக்களாலும் அரசர்களாலும் நன்குமதிக்கப்பெற்று வந்தனர் அநந்தகவி. திருவாலி, திருநகரி, திருக்குடந்தை, நாச்சியார்கோயில்

முதலான திவ்யதேசங்களுக்கு அடிக்கடி பகவத் விஷயமாய்க் கவிபாடத்தலைப்பட்டார் கவிஞர். வயதுவந்தபிறகு பெரியோரது ஆதரவு வேண்டி திருக்குடந்தைக்கடுத்த திருவிடைமருதூர் என்னும் நகரம் சென்று அங்கு மேலும் தம் கல்வித்திறமையை விரிவாக்கிக் கொண்டார். அந்நகரத்திலிருந்த பிரதாப ஸிம்ஹ மஹாராஜாவின் வேண்டுகோட்கிணங்கி அங்கு சிலகாலம் வஸித்ததனால் இவருக்கு மத்தியார்ச்சுனம் அநந்தகவி என்று ஓர் பெயர் வாய்ந்தது.

இவரது ஈரொன்பதாம் ஆண்டில் திருவரங்கத் திருப்பதிக்கு அண்மையில் காவிரியின் தென்கரையில் உள்ள தோகூர் என்னும் அக்கிரகாரத்தில் தலவகார ஸாமவேத ஜைமினி ஸூத்ர வாசிஷ்டகோத்ரத்தில் உற்பவித்த ஸ்ரீநிவாஸஐயங்கார் என்ற ஒரு தார்மிகர் தம் கன்னிகை லக்ஷ்மி அம்மாள் என்னும் பெண் மணியைத் திருமணமுற்றுவித்தார். ஆங்காங்குள்ள திவ்யதேசங்களுக்குச் சென்று கவிபாடிவந்தார் நம் கவி.

இவரது குலகுரு திருசிரபுரத்தைச்சார்ந்த ‘மசிலி’ என்னும் கிராமத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீநிவாஸ தீக்ஷிதர். ஒரு ஸமயம் தீக்ஷிதர் அவர்கள் மத்யார்ச்சுனத்தில் எழுந்தருளியிருந்தபோது அநந்தகவியைச் சந்தித்தார். அவரது கவிபாடுந்திறமையைமெச்சினர். ஒரு நாள் அவரை அழைத்து ‘சீர்காழி அருணாசலக்கவிராயர் அவர்கள் ஸ்ரீமத்ராமாயணத்தில் பாலகாண்டம் முதல் உயுத்தகாண்டம் ஈருகவுள்ள ஆறு காண்டங்களையே நாடகத்தமிழிற் பாடியுள்ளார். அவரால் எழுதாமல் விடப்பெற்ற இராமகதையின் உத்தரகாண்டத்தை நாடகத்தமிழில் கீர்த்தனரூபமாக நீர் இயற்றவேண்டும்’ என்று ஆஜ்ஞாபித்தார். குருவின் வாசகங்கொண்டு ‘உத்தரராமாயணக்கீர்த்தனைகளை’ இயற்றி ஸ்ரீரங்கநாதன் ஸந்நதியில் அரங்கேற்ற அங்குள்ள ஆசார்யசிகாமணிகள் ‘அநந்தபாரதி’ என்னும் பட்டத்தை இவருக்கு அளித்தனர். திருவரங்கத்தில் எழுந்தருளியிருந்தகாலத்து திருநாராயணபுரம்சடகோபராமாநுஜாசாரியாரிடம் ஸ்ரீபாஷ்யகாலக்ஷேபஞ்செய்தார் பாரதி.

ஸ்ரீரங்கத்திலிருந்து திருக்குடந்தை சென்று அங்கு சிலகாலம் வசித்துவந்தார். அச்சமயம் அங்கு தாசில் உத்தியோகம் பார்த்துவந்த திருவேங்கடத்தய்யங்கார் என்பவர் பாரதியாரின் பாடுந்திறமையைக் கேள்வியுற்று அவரை நாடி ‘ஸ்ரீநிகமாந்ததேசிகவைபவப்ரகாசிகை’ என்னும் க்ரந்தரத்நத்தை நாடகப்ரபந்தமாய் தமிழில் யாவரும் அறியும் வண்ணம் எளிய நடையில் இயற்றித் தருமாறு வேண்டினர். அவரது விருப்பத்திற்கிணங்கி பாரதியாரும் அவ்வாறே அந்தக் க்ரந்தத்தை நாடகத்தமிழில் இயற்றி திருக்குடந்தை ஸ்ரீ ஆராவமுதன் ஸந்நதியில் உள்ள கவிவாதிசிங்கர் என்னும் வேதாந்ததேசிகர் ஸந்நதி மண்டபத்தில் பல கவிவாணர்களும் பிரமுகர்களும் நிறைந்த வித்வத்ஸபையில் அரங்கேற்றினார். இதனால் பாரதியாரின் மகிமையை அநேகர் ஆவலுடன் கேட்டு இவர் இருக்குமிடம் தேடிவந்து இவருடைய வாக்விபூதியை ச்ரவணஞ்செய்து ஆநந்தத்தை அநுபவித்தனர்.

பாரதியாரது பெயரையும் புகழையும் அப்போது திருச்சிராப்பள்ளியிலிருந்த ‘யோனீஸ்வரர்’ என்னும் ஒரு பிரபல உத்யோகஸ்தர் கேள்வியுற்று எல்லாவகையிலும் அவருக்கு ஆதரவு அளித்து ஸ்ரீ பாகவதத்தின் முக்கிய பிரிவாகிய தசமஸ்கந்தத்தை ஸ்ரீதர ஸ்வாமி வியாக்யாநரீதியாய் நாடகத்தமிழில் இயற்ற வேணுமாய் வேண்டிக்கொண்டார். அதற்கான ஸகல வசதிகளும் செய்துகொடுத்தார். பாரதியாரும் ஸர்வபாநுவாண்டு சித்திரைத்திங்கள் ஈராறும் நன்னாள் ஸோமவாரம் உரோகிணி நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் ஸ்ரீபாகவதம் தசமஸ்கந்தம் ஸாஹித்யம் செய்ய ஆரம்பித்து பிரதமபாகம் 54-ம் அத்தியாயம் ஸ்ரீருக்குமிணிப் பிராட்டியார் திருக்கல்யாணம்வரையிற் பாடி முடித்து, விரோதி வருஷம் கார்த்திகை மாதம் உத்தான ஏகாதசியில் ஸ்ரீரங்கம் ஸ்ரீ அழகியமணவாளன் ஸந்நதியில் அரங்கேற்றத் தொடங்கி தையொருதிங்கள் முதற்றேதி முற்றுப்பெறச் செய்தனர். திருவல்லிக்கேணி நிலக்கல்லு சடகோபாசாரியார் போன்ற பல பெரியோர்களும் மற்றும் ஸ்ரீரங்கத்திலுள்ள பல பக்தசிரோமணிகளும்

பிரபந்தத்தை நன்ருகக் கேட்டு மகிழ்வெய்தினர். இதில் அவருக்குத் தமது குருவாகிய ஸ்ரீநிவாஸதீக்ஷிதரவர்களின் சகோதரராகிய அண்ணு தீக்ஷிதர் என்பரின் அன்பும் ஆதரவும் கிடைத்தது. உத்தரராமாயண கீர்த்தனைகளுக்கு குருவாகிய தீக்ஷிதரவர்களே ஆசீர்வாத ச்லோகமும், எழுதத்தொடங்கும் நாடகத்தின் பூர்வ அத்யாயத்தின் இரண்டு சுலோகங்களும், மாருதி துதியாகிய ஒரு க்ரந்த கீர்த்தனமும் செய்துகொடுத்து உதவியது நினைக்கற்பாலது. பின்னர் 55-ஆம் அத்தியாயம் முதல் 86-ம்அத்தியாயம் வரையில் ஸாஹித்யம் செய்து, 87-ம் அத்தியாயம் சுருதி கீதைக்கு பகவந்நியமனத்தின்பேரில் ஸ்ரீரங்கம் கீழ உத்தரவீதியில் தங்கியிருந்த ஸ்ரீமுஷ்ணம் ஆதிவராஹ ஸ்வாமியிடம் பொருள்நுட்பம் உணர்ந்து அக் கீதையையும் மற்றுமுள்ள மூன்று அத்தியாயங்களையும் ஸாஹித்யம் செய்து ஏவிளம்பி வருஷம் கம்பநாட்டாழ்வானது இராமாவதாரம் அரங்கேற்றப்பெற்ற பங்குனி உத்திரமான பகற்போதில் ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதியிலேயே ஸ்ரீபாகவதம் உத்தரபாகமும் அரங்கேற்றினர் அநந்தபாரதி.

இத்தகைய ஸ்ரீபாகவததசமஸ்கந்தகீர்த்தனையானது ஸம்ஸ்க்ருத மூலத்திற்குக் கொஞ்சமேனும் வித்தியாஸமன்னியில் ஸ்ரீதரஸ்வாமியின் வியாக்கியாந பங்க்தியை முற்றிலும் அநுஸரித்துப் பெரியோர்களால் அநுமோதனம் பண்ணப்பெற்றுள்ளது.

‘கோவியற் குடியெனுங் குறைவிலா வூர்தனில்
மாவியற் பெருமைசேர் மறையவர் குலத்து
சீர்பெறு நான்மறைச் சிக்கறுத் தருளி
பார்புகழ் வியாதப் பகவன்மா ணுக்கனும்
பூர்வமீ மாஞ்சப் புண்ணிய நூலை
யார்வமோ டுலகுக் கருளிய வருந்தவச்
சயிமனி யென்னுந் தலைமையோன் சூத்திர
நயமுறு தலவகா ரப்பெயர்ச் சாகையில்
அரசரிற் பிறந்துபே ரந்தணர் தன்மையை
விரசதாய் மேவிடு விச்சுவா மித்திரப்
பெரியோன் கோத்திர மதனிற் பிறந்த
அரியனுஞ் சீனிவா சப்பெய ரந்தணற்
கலகில்பல் புகழுடை யற்பக னுகி
உலயனிற் சுகத்தவ னுதித்தன னென்ன
அவதரித் திட்ட வந்தணர் சிகாமணி
பவவிரு ளகற்றிப் பரகதி யுய்த்திடு
வடகலை தென்கலை வளஞ்சே ரிரண்டு
திடமுறு பாடையின் றேர்ச்சி யுள்ளோன்
நாதசங் கீதத்தில் நாரத னிகர்த்தோன்
தரும நூலின் றத்துவ முணர்ந்தோன்
கருமகாண் டப்படிக் காதலாய் நடந்தோன்
முத்தீ யோம்பு முறைவழு வாதவன்
பத்திமார்க் கத்திற் பராசரற் கொப்போன்
ஞானமும் பத்தியும் நன்குற விளக்கும்
ஊனமில் விசிட்டா த்வைதப் பாடியம்
எனவுரை வைணவச் சித்தாந் தாமுதக்
கனைகட லிடைத்துளை கைம்மா வொத்தோன்
நனந்தலை யுலகிடை நாட்டுங் கீர்த்தி
அனந்தபா ரதியெனு மருங்கவிப் புலவன்’
என்றும்;

‘கங்கை யரும்பிய பங்கயத் திருமலர்
தங்கிவான் பரந்த தென்ப நீட்டிடுங்
கழலடிக் தெய்வத் தழுவணி யலங்கற்
கிழவனுல குயிர் தொழுதேத் தெடுப்ப
முத்தொழி லினுமுயர் சத்துவ குணத்தாம்
மெய்த்தகைப் புரவு வைத்தருள் வள்ளல்
எடுத்தபத் துருவின் வடுத்தபு துவரையின்
அடுத்தரு ளாடன் முடித்திடு மாயோன்
தகைச்சரி தம்புகல் சுகத்திரு முனிவன்
இகததுரை மொழியி னகப்பொரு ளொருவா
தியம்பின னுடக நயப்பொழி தமிழின்
செயம்பெறு வளவன் பயம்பொரு பழிதீர்
மிடைமரு தடிக்கட் படர்பா ணர்திரு
விடைமரு தூருறும் வடமொழி தென்மொழி
வாருதி யருந்திய காரெனு மநந்த
பாரதி யென்னு மோரரு மறையோன்’
என்றும் செந்தமிழ்வாணர்கள் வழங்கிய சிறப்புப் பாயிரவடிகளால் பாரதியாரின் தனிப் பெருமை நன்கு விளங்கும்.

அநந்தபாரதியாரால் இயற்றப்பெற்ற பிரபந்தங்கள் அனேகம். கீர்த்தனை ரூபமாக திருவரங்கநாதர் பேரிலும், பஞ்சநதீஸ்வரர் பேரிலும், திரிசிரபுரம் தாயுமானுர் பேரிலும் மற்றும் பல தேவாலயங்களிலும் பாரதியார் பல பிரபந்தங்கள் இயற்றினுர். திருக்குறளின் தாத்பரியத்தை ஆசிரியவிருத்தத்தில் திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய

தேசிகரின்போரலமைத்த 'முப்பாற்றிரட்டு' என்னும் பிரபந்தத்தை இயற்றியுள்ளார்

அபிதானசிந்தாமணி (மதுரைத் தமிழ்ச் சங்கம் பிரசுரம் 9 பக்கம் 74. 1910)இவரைப் பற்றி பின்வருமாறு கூறுகின்றது:-

'அநந்தபாரதி ஐயங்கார்:-இவர் தஞ்சாவூரிலிருந்த வித்வான். உத்தர ராமாயண கீர்த்தனை, பாகவததசமஸ்கந்த நாடகம், தேசிகப்பிரபந்தம், மருதூர் வெண்பா, யானை மேலழகர் கொண்டிச்சிந்து, முப்பாற்றிரட்டு செய்தவர்.'

இவரது பிறந்த ஊர் உமையாள்புரம் என்றும், இவருக்குக் 'கவிராஜ ஸ்வாமி' என்ற பிருது வழங்கப்பெற்றிருந்ததாகவும் தெரிகிறது.

பாரதியாரின் கீர்த்தனைகள் யாவும் ராகரசப் பொருத்தமாய் அமைந்துள்ளன. பூர்வபிரசித்திபெற்ற பிலஹரி, ஆனந்தபைரவி, சாவேரி நாதநாமக்கிரியை முதலிய இராகங்களை இவர் அவ்வப்போது கையாண்டிருக்கிறார். இவரது கீர்த்தனைகள் ஆதி, சாபு, ரூபம் ஆகிய இம் மூன்று தாளங்களில் மட்டுமே அமைந்துள்ளன. 'சௌராஷ்டிரம்' என்னும் மங்கள ராகத்தில் தொடங்கப்பெற்று நயராகமாகிய காம்போதியில் இவரது கீர்த்தனைகள் முற்றுப் பெறுகின்றன. சந்தர்ப்பங்களை நோக்கி உவகைச்சுவைக்கு பூபாளமும் பிலஹரியும்; வீரச்சுவைக்கு நாட்டை, அடாணாவும்; வெகுளிச்சுவைக்கு பைரவியும்; கருணைச் சுவைக்கு சஹானாவும்; அவலச்சுவைக்கு புன்னாகவராளி, ஆஹிரி, செஞ்சுருட்டி, நாதநாமக் கிரியைபோன்ற ராகங்களையும் மிகப்பொருத்தமாக அமைத்துள்ளார். 'கன்சிட்டு' எனும் புதிய ராகத்தையும் காண்கிறோம். வெண்பா, விருத்தம், கண்ணிகள், த்விபதை, பழமொழி அடங்கிய தருக்கள் முதலியவைகளை இவர் உபயோகித்துள்ளார். இவரது கீர்த்தனங்கள் எளிய நடையில் அமைந்துள்ளன. இவற்றில் எதுகை, மோனை முதலிய இலக்கணங்கள் ஒழுங்கு தவறாது வர்ணனை சம்வாத தருக்களிலும் கையாளப்பெற்றிருக்கின்றன.

பாரதியாருக்கு விவாஹமாகி பல ஆண்டுகள் வரை ஆண் சந்ததி இல்லை. அதனால் தமது சிறிய தகப்பனாராகிய கோபாலஐயங்காரின் குமாரரான ஸ்ரீநிவாஸபாரதியாரை ஸ்வீகாரம் செய்துகொண்டார். சின்னாளில் ஒரு ஸத்புத்திரன் பிறக்க அம் மைந்தனுக்குக் கிருஷ்ண சாமி எனப் பெயரிடப்பெற்றது.

பாரதியாரின் அற்புதச் செயல்களில் ஒன்று கூறுவாம். திருக்குடந்தை ஸ்ரீ ஆராவமுதன் ப்ரஹ்மோத்ஸவத்தில் கருட ஸேவை இரவு. கருடாழ்வான்பேரில் ஆரோகணித்திருக்கிறார் எம்பெருமான். ஸ்ரீபாதந்தாங்குமவர் எழுந்தருளச்செய்ய எவ்வளவோ முயன்றும் அவன் எழுந்தருளவில்லை. ஸேவார்த்தமாக வந்த அநந்த பக்தகோடிகள் அலமருகின்றனர். பகவான், அங்கு குழுமியுள்ள ஒரு ஸ்ரீவைஷ்ணவர்பேரில் ஆவிர்ப்பவிக்கிறார். 'நம்முடைய அநந்த பாரதி ஸேவிக்கவாராததால் நம் புறப்பாடு காலவிளம்பமாகத் திருவுள்ளங் கொண்டனம்' என்று அருளிச்செய்கிறார் அவர். அனந்தகொத்துப்பரிஜனங்கள் பாரதியாரின் திருமாளிகைக்கு விரைந்து ஓடுகின்றனர். பெருமாள் எழுந்தருளாக் குறையை விண்ணப்பிக்கின்றனர். உடனே பாரதியார் வெகு வேகமாகக் கோயிலுக்கு எழுந்தருளிப் பெருமாளை ஸேவிக்கின்றார்.

சீர்மறையோர் வாழுந் திருக்குடந்தை கண்வளரும்
ஏர் பெருகு மாரா வமுதனே—பாரில்
அருடங்கு மன்பர்கட மார்த்திநிறை வேறக்
கருடன்மேல் நீவந்து கா.

என்று ஓர் வெண்பாவைப் பாடுகின்றார் பாரதி. உடனே எம்பெருமான் எழுந்தருளி விடுகிறார். அங்குள்ளார் அனைவரும் அநந்த பாரதி மஹான் தெய்விக அவதார விசேஷம் என்று கொண்டாடுகின்றனர்.

இவ்வாறு பெருமையுடன் திகழ்ந்து பல பல நூற்றுக்கணக்கான கீர்த்தனங்களை இயற்றி அருந்தொண்டாற்றி சாலிவாகன சகாப்தம் 1768 (கி. பி. 1845) விச்வாவசுநாம ஸம்வத்ஸரம் ஆடி-மீ 20-உ பரமபதத்தையடைந்து

(தொடர்ச்சி 337 ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீஅஹோபிலமடம் **43**-வது பட்டம் ஸ்ரீவீராகவசடகோப யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரமஹோத்ஸவம்.

திருவள்ளூர்

இவ்வருஷம் கார்த்திகை மாதம் 6-வ யன்று வெள்ளிக்கிழமை ஸ்ரீசின்னஅழகியசிங்கர் (43-வது பட்டம் தேவனார்விளாகம்) ஸ்ரீவீராகவ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் திருவுள்ளூரில் சிறப்பாக நடந்தேறியது. ஸ்ரீ ஸந்நிதியில் அதிகாலையிலிருந்தே வாத்யங்கள் முழங்கின. ஸ்ரீ ஸந்நிதி வாசலிலும், சின்ன ஆச்ரமத்தின் வாசலிலும் தோரணங்கள் கட்டப்பட்டு இருந்தன. பச்சிலை நீள் வாழைகள் மச்சணிமாடங்கள் மீதணவாநின்றன. இம் மஹோத்ஸவத்திற்குஅனேக ஸ்ரீவைஷ்ணவர்கள் குழுமியிருந்தார்கள்.

காலை 6–30 மணிக்கு விச்வரூபாராதநம் ஸ்ரீ மாலோலனுக்கு செய்தருளுவதற்காக ஸ்ரீ சின்ன அழகிய சிங்கர் ஆச்ரமத்திலிருந்து ஸ்ரீ மடத்திற்கு எழுந்தருளினர். அவ்வமயம் நான்கு நாதஸ்வரங்கள் பாட சத்ர சாமராதிகளுடன் (வழக்கம்போல்) எழுந்தருளினர். வலது திருவடியை வைத்து ஸ்ரீ ஸந்நிதிக்குள்ளே எழுந்தருளும்போது ஸ்ரீ அழகிய சிங்கரை ஸேவித்தவர்களுக்கு 'கஜஸிம்ஹகதீவீரௌ' என்று வால்மீகி பகவான் பணித்த ராமலக்ஷ்மணர்களின் கஜகதியும் ஸிம்ஹகதியும் நினைவிற்கு வந்தன. பெரியாச்ரமத்திற்கு எழுந்தருளி ஸ்ரீ அழகிய சிங்கரை தண்டம் ஸமர்ப்பித்து, அவ்விடத்திய நியமனம் பெற்று ஆராதநத்திற்கு எழுந்தருளினர். விச்வரூபமங்கள ஹாரத்தியின்போது 'யேநஃவேஃநூநவஃநாஜூநஃஸிஷணம்ஸாக்ஷத்ஸகூஜ்ரஸ்வகூஜணாய யஸாவோஸ்யூ' என்னும்படி காமதேநுவே என்று சொல்லக்கூடியதான பசுவும், உச்சைச்ரவஸ் துல்யமான அச்வமும் நின்றன. 'ஹூஸேவிஜஸாஜோஸஜ்ஜாவஜூஃதஷணூஸேஸாஃ' என்பது வாஸ்தவமாகவே இருந்தது. ஆகையால், வாத்யங்கள், பேரிகள், திருச்சின்னம் முதலியவைகள் ஆர்த்தன. பஞ்சாங்கச்ரவணாநந்தரம் தசாவதார ஸ்தோத்ரம் முதலான ஸ்தோத்ரங்கள் பாடினார்கள்.

பிறகு ஸ்ரீ பெரிய அழகிய சிங்கர் அபிகமன மங்களஹாரத்தி செய்தருள தீர்த்தம், ஸ்ரீசடாரி, ஸ்ரீபாததீர்த்தங்கள் ஸாதிக்கப்பட்டன. இரண்டு ஸ்ரீ அழகியசிங்கர்களுக்கும் மாலோலனின் மாலை மரியாதைகள் ஆயிற்று. ஸ்ரீ அழகிய சிங்கர் ஆஸநத்தில் வீற்றிருக்க, ஸ்ரீ சின்ன அழகிய சிங்கர் வெற்றிலை, க்ருமுக நாரிகேளங்கள் கதளீ முதலிய பழவகைகள் நிறைந்த தட்டை திருக்கையிலேந்தி ஸ்ரீ அழகியசிங்கருக்குஸம்பாவனை செய்தருளி 'யதீநாம் வநுநக்ருயல்' என்கிற விதிப்படி தெண்டனிட்டு விடைபெற்று

(336-ம் பக்கத்தொடர்ச்சி)

இவருக்குப் பின் இவரது இரு மைந்தர்களும் இவரது கீர்த்தனைகளை காலக்ஷேபங்கள் மூலம் பிராபல்யம் அடையச்செய்தனர். இவர்கள் லோகோத்தரமான கியாதியுள்ளவர்கள். கிருஷ்ணஸ்வாமி பாரதியின் புத்திரர் அநந்த பாரதியும் தமது பாட்டனார்போல நல்ல விற்பன்னர்.

'சீரார் குடந்தைத் திருக்கண் வளர்கின்ற
ஆரா வமுத னடியிணையை—நேராகிச்
சென்றடைந்த வேதாந்த தேசிகன்றன்
[வைபவத்தை
இன்றெடுத்துச் சொல்லுவேன் யான்'

என்று உபக்ரமிக்கிறார் வைபவப்பிரகாசிகைக் கீர்த்தனையை பாரதியார். இவரது கீர்த்தனையை தேசிகதரிசனத்தார் அனைவரும் நன்கு அப்யஸித்து ஸ்ரீமந்நிகமாந்தமஹா தேசிகனது திவ்யகடாக்ஷத்திற்குப் பூர்ணபாத்திரராகவேண்டும் என்பது அடியேனது பிரார்த்தனை.

பக்கத்தில் ஆஸநத்தில் வீற்றருளினர். ஸ்ரீ சார்ஙம் ஸ்வாமி அந்த ஸம்பாவனைத்தட்டை எடுத்துக்கொண்டு குழாங்களாய்கூடியிருந்தாருடன் ஸ்ரீ சின்ன அழகியசிங்கருக்கு ஸம்பாவனைசெய்தருளினர். இம்மஹோத்ஸவத்திற்கெழுந்தருளியவர்கள் தனித் தனியாகவும் ஸம்பாவனை செய்தார்கள். பிறகு கோஷ்டிக்கு அபிகமன ப்ரஸாதங்கள் விநியோகம் செய்யப்பட்டது.

இஜ்யாகால மங்களஹாரத்தி 12 மணிக்கு முடிந்தவுடன் அறுசுவையுடன் கூடிய ததீயாராதநம் மிக்க பரிவுடன் விசாரிக்கப்பட்டு நடந்தேறியது. பிறகு இரண்டு ஸ்ரீ அழகிய சிங்கர்கள் தங்கள் தங்கள் ஆஸநத்தில் வீற்றிருக்க, வேதியர் ஓதும் வேதவொலி பரவைத்திரைபோல் முழங்க, சந்தன தாம்பூலத்துடன் தேங்காயையும் கோஷ்டிக்குக் கொடுத்தார்கள்.

ராத்ரி பானகாராதனம் முடிந்தவுடன் டோலத்ஸவம் தொடக்கமாயிற்று. ரஜதமயமான மண்டபத்தில் தங்கடோலையில் ஸ்ரீ கண்ணன் ‘கஸ்தூரீ திலகம் லலாடபலகே வக்ஷஸ்தலே கௌஸ்துபம் நாஸாக்ரே நவமௌக்திகம்... கரே கங்கணம் ஸர்வாங்கே ஹரிசந்தனம் ச கலயன் கண்டே ச முக்தாவலிம்......விஜயதே கோ-பாலசூடாமணி:’ என்கிறபடி ஸர்வாபரண பூஷிதனாய் ஸேவை ஸாதித்தான். இந்த ஸேவையை ஸேவித்தவண்ணம் ஸ்ரீ சின்ன அழகிய சிங்கர் வீற்றிருக்க, பத்து தினங்களுக்கு முன்பே கண்ணன் டோலோத்ஸவத்தில் பாடவேணுமென்று அவா இருப்பதாயும் உத்ஸவமும் ஸமீபகாலத்தில்நடக்கப்போவதாக கேள்விப்பட்டதாயும் அதில்பாட நியமனமாக வேணுமென்று ப்ரார்த்தித்துச்சென்ற ஸ்ரீ. எஸ். வி. பார்த்தஸாரதி ஐயங்கார் அங்கு வந்து ஸ்ரீ அழகிய சிங்கரை தண்டம் ஸமர்ப்பித்து கீதங்கள் பாடினர். அவை ‘தந்யை: ச்ருதம்......கீதே யேந ஹி பிலா: ஸலிலாம் பபூவு:’ என்னும்படி அமைந்திருந்தனவென்றால் மிகையாகாது. அநேக மடங்களிலிருந்து வந்த மரியாதைகள் ஸ்ரீ அழகிய சிங்கர்களுக்கு ஸமர்ப்பிக்கப்பட்டன. மங்களங்கள் பாடியதும் மங்களவாத்யங்கள் முழங்க உத்ஸவம் இனிது முடிவடைந்தது.

நடாதூர் க்ருஷ்ணதாஸன்.

ஸ்ரீரங்கம்

இச்சமயம் 43-வது பட்டம் ஸ்ரீ அழகிய சிங்கர் திருநக்ஷத்ரமஹோத்ஸவம் இவ்வூர் ஸ்ரீ அஹோபிலமடத்தில் கார்த்திகைமீ 6உ வெள்ளிக்கிழமை காலையில் கோஷ்டியுடன் நன்றாக நடந்தது. அன்று ஸாயங்காலம் நம் தேசிகன் ஸன்னிதியில் ஸ்ரீ அழகியசிங்கரின் குணாதிசயங்களைப் பற்றி மிகவும் அழகாக ஸ்ரீ புத்தங்கோட்டகம் ஸ்வாமி உபந்யஸித்தருளினர். ஆஸ்திகர்கள் எழுந்தருளியிருந்து நன்றாக நடத்திவைத்தார்கள்.

நரஸிம்ஹ தாஸன்.

தேரழுந்தூர்

இவ்வூர் ஸ்ரீ அஹோபிலமடத்தில் நடந்த கார்த்திகைமீ 6உ வெள்ளிக்கிழமை 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ரமஹோத்ஸவம் மிகவும் விசேஷமாக கொண்டாடப்பட்டது. அவ்வாமயம் உள்ளூர் ஸ்ரீ அஹோபில மடம் ஏஜண்டு கே. கோபாலையங்கார் (ரிடையர்ட் ஹெட்மாஸ்டர்) ஸ்ரீ அழகிய சிங்கரின் குணாதிசயங்களைப்பற்றி மிகவும் நன்றாக உபந்யாஸம் செய்தருளினர்.

ஆர். லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர்.
கார்யதர்சி, ஸ்ரீவி. ஸபை.

ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கரின் திருநக்ஷத்ர மஹோத்ஸவம், திருவள்ளூர்.

ஸ்ரீ அஹோபிலமடம் திவ்யாஸ்தானத்தில் 34-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய், அபிநவதேசிகனாகக் கொண்டாடப்பட்டுவரும் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகா ஸேவக ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீ சடகோபராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகனின் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் கார்த்திகைமீ 3உ முதல் வேத ப்ரபந்த க்ரந்த சதுஷ்டயாதி பாராயணங்களுடன் உபக்ரமிக்கப்பட்டு கார்த்திகைமீ 7உ சாற்றுமறையுடன் இனிது நடந்தேறியது. இந்த மஹோத்ஸவத்திற்கு வெளியிடங்களிலிருந்து அநேக ஸ்வாமிகள் எழுந்தருளியிருந்து அந்வயித்தனர். கார்த்திகைமீ 6உ வெள்ளிக்கிழமை ஸ்ரீ சின்ன

அழகியசிங்கர் திருநக்ஷத்ரத்திற்காக தூரதேசங்களிலிருந்து எழுந்தருளியிருந்த வைதிக லௌகிகஸ்வாமிகளும் அன்றும் கூடவிருந்து ஷெ மஹோத்ஸவத்தைக் கண்டு அநுபவித்தனர். திருநக்ஷத்ர தினத்தன்று சாற்றுமறையான தும் கோஷ்டிக்கு ஸ்ரீ பாததீர்த்தமானபிறகு பாராயணத்தில் அந்வயித்தஸ்வாமிகளுக்கு ஸ்ரீ அழகியசிங்கர் ப்ரஸாதமாக உசிதமான ஸம்பாவனை ஸ்ரீ அழகியசிங்கர்களால் அநுக்ரஹிக்கப்பட்டது. பாதூர் ராமபத்ர தாஸன்.

ஸ்ரீரங்கத்தில் விசிஷ்டாத்வைதவேதாந்த ஸபையும், ஸ்ரீபாஷ்ய ந்யாயஸித்தாஞ்ஜந க்ரந்தங்களின் பரீக்ஷையும்.

நடந்த ஐப்பசிமாஸம் 15ந்தேதி வெள்ளிக்கிழமை, ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீமத்பரம...பரி...... பௌண்டரீகபுரம் ஸ்வாமியின் வர்ஷாராதனத்தின்பொழுது மேல்குறிப்பிட்ட ஸபையும், பரீக்ஷையும் நடந்தது. பீஷ்ம துல்யரும், பூர்வோத்தர மீமாம்ஸக ரத்நமுமான ஸ்ரீ. உப. அன்பில், வே. கோபாலாசாரியர் ஸ்வாமி, வெகு காலமாக நடத்திப்போரும் கணக்கில் இவ்வருஷமும் சிறப்பாய் ஸபையை 5-நாட்கள்நடத்தி வந்திருந்த பல பல பண்டிதர்களுக்கும் ஸம்பாவனையைச் செய்தருளினர். தினந்தோறும் வித்வான்களால் ஸ்ரீபாஷ்ய அதிகரணங்களில் சர்ச்சையும், வேறு உபந்யாஸங்களும் நிகழ்த்தப்பெற்றன. ஸ்ரீ கோபாலாசாரிய ஸ்வாமி, அத்வைத கண்டனமாய் எழுதியுள்ள, 'வேதாந்த ரக்ஷாமணி விமர்சத்தின் 4-வது பாகமும், ஸங்க்ஷேபராமாயணத்திற்கு எழுதியுள்ள ஓர் உரையும், படிக்கப்பட்டு வந்த வித்வான்கள் அனைவருடையவும் ஒரு முகமான புகழ்ச்சியைப்பெற்றன.

ஷெ ஸபையின் 4-வது நாள் மாலை ஸ்ரீமத்பரம...பரி... நடாதூர் ஆண்டவன் நியமனப்படி ஸ்ரீ ந்யாயஸித்தாஞ்ஜநக்ரந்தத்தில், எழுத்துமூலமான பரீக்ஷைநடத்தப்பட்டது. 6 பரிச்சேதங்களிலும் கேள்விகள் கொடுக்கப்பட்டன. அவற்றுள் கண்டிப்பாய் விடையிறுக்கவேண்டிய ஒரு வினாவும் கீழ் கண்டபடி கொடுக்கப்பட்டது. 'ஒரு காரியத்திலேயே புருஷகாரமாயிருத்தல் உபாயமாயிருத்தல் என இரு தன்மைகள் பெரிய பிராட்டிக்குக் கூடும்படி எங்ஙனேயோ? அவ்விரு தன்மைகளின் ஸ்வரூபவிவேகம் எத்தகையது? இதில் மூலமருளிச்செய்த ஸ்ரீதேசிகனுடையவும், வ்யாக்யாநகர்த்தாக்களான ஸ்வாமிகளுடையவும், திருவுள்ளம் கிடக்கும்படி எதுவோ? வெளியிடுக' என்று. இந்த பரீக்ஷையில் (1) ஸ்ரீ. உப. வில்லிவலம் நாராயணாசாரிய ஸ்வாமியும், (2) ஸ்ரீ. உப. கோழியாலம் ரங்கநாதாசாரிய ஸ்வாமியும், (3) ஸ்ரீ. உப. திருவஹீந்திரபுரம், ராஜகோபாலாசாரிய ஸ்வாமியும் கலந்துகொண்டனர். இம்மூவரும், ஷெ கேள்வியுள்பட எல்லாவற்றிற்கும் தக்கபடி விடையளித்தவர்களாய் பாராட்டப்பெற்று அடைவே ரூ 25, 20, 15 ஸம்பானமளிக்கப்பட்டனர். ஸ்ரீமத்பரம...பரி... நடாதூர் ஆண்டவன், 'லோகத்தில் திட்டமான வேதாந்தஜ்ஞாநத்திற்கு, இம்மாதிரி கட்டுப்பாடான முறையில் ஸம்மானபூர்வகமாக நடத்தப்படும் பரீக்ஷைகளும் அபேக்ஷிதங்களே' என்று திருவுள்ளம்பற்றியாயிருக்கிறது.

ஷெ ஸபையின் 5-வது நாள் காலை ஸ்ரீபாஷ்யத்திலும் எழுத்துமூலமாய் பரீக்ஷை நடந்தது. (1) ஸ்ரீ. உப. கோழியாலம் ரங்கநாதாசாரிய ஸ்வாமியும், (2) ஸ்ரீ. உப. திருவஹீந்திரபுரம், ராஜகோபாலாசார்ய ஸ்வாமியும் அதில் அந்வயித்தனர். முறையே ரூ. 15, 5 ஸம்பாவனை பெற்றனர். இந்த உத்தம தர்மத்தை என்றென்றும் நடத்தி வைப்பதாய் திருவுள்ளம்பற்றி இருப்பவர் பௌண்டரீகபுரம் (கும்பகோணம்) பி. ஆர். ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமியாவர். அன்று மாலை ஸதஸ்யஸத்காரத்துடன் சுபமாய், மீண்டும் நடைபெறுவதற்காக ஸபை முடிவடைந்தது. ஓர் நிருபகன்.

41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஆராதனம், ஸ்ரீரங்கம்.

41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் கைங்கர்யம் ஸ்ரீதசாவதார ஸந்நதி பிருந்தாவநத்தில் 19 10–52முதல் உபக்ரமிக்கப்பட்டு தினம் ஸேவை பாராயணம் கோஷ்டி நடந்தது. 23–10–52 வியாழக்கிழமை கைங்கர்யம் விசேஷமாக நடந்தது. கைங்கர்யதினத்தில் காலையில் ஸேவை சாற்றுமறையும் நன்ருக நடந்து விசேஷ தளிகையும் நடந்தது. இந்த கைங்கர்யத்தை ஸ்ரீ. உப. எம். பி. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ரிடையர்ட் இன்ஜினீர் மிகவும் ச்ரத்தையோடு கூட இருந்து நடத்திவைத்தார்.

நரஸிம்ஹதாஸன், கௌரவஏஜண்ட்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

க்ரந்தார்த்தபரிசுத்தி

[ஸ்ரீ. உப. வித்வான் திருவரங்கம் திருமலைதாதாசார்ய ஸ்வாமி, M. O. L. திருப்பதி.]

முன் ஸஞ்சிகையில் ப்ரசுரமான 'பரிசுத்தி பாகத்தில் ஸ்ரீதேசிகன் ஸச்சரித்ரரக்ஷையில் 'மஹாந் தேவ:' என்கிற வ்யஸ்தபதத்தைப் பற்றி ஸாதித்திருப்பதில் பிறர் அபிநிவேசத்தோடு செய்துவரும் தூஷணமொன்றும் சிறிதும் இடம் பெருதென்று ஸுவிசதமாய் நிரூபித்திருக்கிறோம் என்பது வித்வான்களுக்கு விதிதமே. அதில் ஆரம்பத்தில் ஸ்ரீபாஷ்ய க்ரந்தத்திற்குப் பிறர்சொன்ன துரர்த்தத்தை எடுத்துக் காட்டி நிரஸித்திருக்கிறோம். இதை 'இது அப்படியே யிருக்கட்டும்' என்று அங்கீகரித்தார்கள். மேலுள்ள விஷயங்களையும் அங்கீகரித்துவிட்டார்களென்றும் இனி இவ்விஷயமாக தேசிகதூஷணம் செய்யமாட்டார்களென்றும் நினைக்க இடமிருக்கிறது. இதனுல் தத்காலம் ஸந்தோஷிக்கிறோம்.

அதன்மேல் தமது அநிவார்யமான தூஷணருசியினுல் ப்ரேரிதர்களாய் 'ப்ரஹ்மண: ஸ்வரூபதோ குணதஶ்ச யதாவஸ்திதிப்ரகாஶநம் ஶாஸ்த்ரஸ்ய ஸ்வார்த்த:' என்கிறவிடத்தில்' என்றுள்ள நமது உக்தியில் குற்றங் கூறுகின்றூர்கள்.

> ஸ்வரூபத: என்றதும் பிசகு; குணத: என்றதும் பிசகு; முக்யார்த்த: என்றதும் பிசகு. க்ரமேண— ஸ்வரூபேண குணை:, முக்யோர்த்த: என்றே ஸ்வாமியின் ஸ்ரீஸூக்திகள்

என்கிறூர்கள். ஸ்வரூபத: குணத: முக்யார்த்த: என்றவிவற்றில் ஒன்றும் பிசகன்று. ஆனுல் இவர்கள் சொல்லக்கருதுவது என்னவென்றுல் ஸ்ரீபாஷ்யத்தில் இப்பதங்கள் இந்த ரூபத்தில் இல்லையென்பது. ஸ்ரீபாஷ்யக்ரந்தமுத்ரணம் செய்து இப்படி நாம் பாடத்தைப் போட்டிருந்தால் அப்பொழுது இக்குற்றம் கூற இடமுண்டு. அதவா பாராயணம் பண்ணும்போது அக்ஷரம் மாறினுலும் பாராயணபலம் உண்டாகாதாகையால் குற்றமாம். ப்ராக்ருதத்தில் 'யதாவஸ்திதம்' என்பதின் வாச்யமென்னவென்பதை உள்ளபடி க்ரஹிக்கவேண்டும்' என்று மேல் விவக்ஷிதமான ஒரு பதத்தில் நோக்கம் கொண்டு மற்றதை லாகவாநுரோதேந ப்ரத்யயவிபர்யாஸத்தோடு அநுவதித்தோம். ஸ்ரீபாஷ்யத்தில் பதஸ்வரூபம் இப்படியேயிருக்கிறதென்று சொல்லவில்லை. என்கிறவிடத்தில் என்றோம். ஸ்வரூபம் ஒன்று; குணங்கள் பல. இதை ஸ்பஷ்டமாக்க மூலத்தில் ஸ்வரூபேண குணைஶ்ச என்று விபக்திப்ரயோகம் ஆவச்யகமாயிற்று. இந்த விசேஷத்தை விவக்ஷிக்காதபோது ஏகரூபமாய் ஸ்வரூபதோ குணதஶ்ச என்கிறோம். இதே இடத்தில் தத்வடீகையில் 'ஸஹஜோபாதிக ஸ்வரூபதோ குணதஶ்சேத்யவக்த்ருத்வே' என்றிருப்பதை ஸாவதாநமாலோசிக்கவேணும். விபக்தியைக்காட்டிலும் தஸில்ப்ரத்யயம் ப்ரயோகிப்பதில் ப்ரவ்ருத்திஸ்வாரஸ்யமதிகம். தனிப்ரயத்நமின்றி ஸாமாந்யமாய் விபக்திப்ரயோகம் வருவதில்லை. ஸ்ரீமத்கீதார்த்தஸங்க்ரஹம் மூன்ருவது ச்லோகத்திலுள்ள ப்ரகீர்த்தித: என்றதின் விவரணத்தில் ஸ்வாமி 'ஸ்வரூபத ஈதிகர்த்தவ்யதா: விஷயத: காயத: ப்ரகர்ஷதயா கீர்த்தித இத்யர்த்த:' என்று ஸாதித்திருக்கிறூர். எட்டாவது ச்லோகத்தை விவரிக்குமிடத்தில்

> ஸ்வரூபத: ப்ரகாரதோ ப்ரவ்ருத்த: காரணத: காலத: ப்ரயோஜநதஶ்ச விவ்ருதம்

என்றருளிச்செய்கிறூர். ஸ்ரீமத்பாஷ்யகாரரும் ஸ்ரீகீதை இரண்டாவது அத்யாயம் ருஶ்ய ப்ரதீச்லோகத்தின் பாஷ்யத்தில்

> தத்வதோ ந ஜஶ்சிதேஷ .... தத்வதோ தர்ஶநம் தத்வதோ ஜ்ஞாநம் தத்வத: ஶ்ரவணம் ப்ரத்யக்ஷம் ஜ்ஞாதி

என்று ஸாதித்திருக்கின்றார். ‘தகெவ ரயஶ்விஷ விதீஶ்வர’ என்கிற ஆளவந்தார் ஸ்ரீஸூக்தி ஸர்வதா புத்திஸ்தமாயிருக்கச்செய்தேயும் தகவதஃ என்றே ப்ரயோகிப்பதின் ரஹஸ்யத்தை ஆலோசிக்கவேணும்.

‘ப்ரஹ்மஸ்வபஃ ஸம்பவஸ்வவஸ’ என்று ஸ்ரீபாஷ்யமிருக்க, ‘ப்ரஹ்மஸ்வபவஸெவ ஸம்பவஸ பொரவி’ என்று ஸ்ரீபாஷ்யகாரர் முடித்திருக்கிறார்’ என்று ஸ்ரீபாஷ்யகாரர் ஸாதித்ததாகவே நேர் விபரீதார்த்தை எழுதிவிட்டு, ஸ்வரூபெவண ரூபெணஶ்வ என்றுள்ளதை ஸ்வரூபவதஃ ரூபணதஶ்வ என்கிறவிடத்தில்’ என்று ‘ஸ்ரீபாஷ்யகாரர் ஸாதித்திருக்கின்றார்’ என்னும்படி பொதுவாகச் செய்த அநுவாதத்தில் க்ரந்தவிப்லவம் வந்துவிடுமென்றுக்ரோசம் பண்ணுமவர்களின் ஹ்ருதயபரிபாகம் ஸர்வவிதிதம். வவஹ்நிதொ வஹ்நிரொது யஸூரொக ஶஹாநஸவக என்பதற்கு, பர்வதத்தில் வஹ்நி இருக்கின்றது. இதே ந்யாயந்தான் மஹாநஸத்திலும் என்று பதவுரை எழுதாது கருத்தையேகாட்டுமவர்கள் வவஹ்நிதெ வஹ்நிரஸ்தி ஶஹாநஸ ஊவ என்பவர்களை தூஷிக்கின்றதாக ஆகின்றது. ராமோ ஜயதி என்ற வால்மீகி வாக்குக்கு ராவணோ ஜயதி என்று பொருள் கூறினால் இது கருத்தைக் காட்டினதாக ஆகும்; ‘ராவணோஜயதி’ என்றவிடத்தில் என்று அநுவதித்தால் ப்ரமாதம் வந்துவிடும் என்றதாக முடிகின்றது. கஷ்டம்.

நாம் காலக்ஷேபம் செய்த ஸ்ரீநாகஷர ஸ்ரீபாஷ்யபாடம் ஶவ்யாயஃ என்றுதான். பஹுப்ராசீநமான ஆந்த்ரலிபி ஸ்ரீகோசத்திலும் இந்த பாடம் இருக்கின்றது. இதில் ஒரு அவத்யமும் சொல்லமுடியாது. வொரவஶ்வ ஶவ்யாயஃ என்று அவ்யவஹிதபூர்வத்தில் ஷஷ்டி இருப்பதால் பஹுவ்ரீஹிப்ராந்திக்குச் சிறிதுமிடமில்லை. கர்மதாரயஸமாஸமுள்ள ஶவ்யாயஃ என்பதும் ஶவொரயஃ என்கிற வ்யஸ்தமும் பர்யாயந்தான்.

ராஜ்ஞ: புருஷ: ராஜபுருஷ: என்றவிடத்தில்போல் ஶாஸ்த்ரீய ஶாப்தபோத ப்ரக்ரியையில் சிறிது பேதமுண்டு. வரவண்ஞ ரீகெ, கஷிஶவ்யாணெ, கவிகளிபிஃ என்று ஸமஸ்தப்ரயோகங்கள் பலபல. ரஸகங்காதரகாரனாய் ப்ரஸித்த ஆலங்காரிகனான ஜகந்நாதகவி சித்ரமீமாம்ஸாகண்டநத்தில் ஶவெஶ்யெ என்று ஓரிடத்தில் ப்ரயோகித்து அடுத்த பக்கத்தில் (3) ஶவ்யாயெ என்று ப்ரயோகித்திருக்கிறான். இதற்கு சேகரகாரனான நாகேசபட்டன் விவரணம் ஶவ்யாயெ வாவீஸ்நாநெ என்றிருக்கிறது.

‘கஸரீவீ நவராஜுவா ஸவதெ’

இப்படி அஜ்ஞர்கள் த்வேஷத்தினாலே செய்யும் ஆசார்யதூஷணம் அவர்களுக்கே ஹாநிப்ரதம் என்று காட்டினோம். அவர்கள் மூடபக்தியினாலே செய்யும் பூஷணமும் அவ்விதமேயென்று சிறிதுகாட்டுகின்றோம். ‘லொகவத்து ஶீலாகைவல்யம்’ என்றவிடத்தில் ‘ஜமத்ஸ்ருஷ்டெ ஶீலைவ கேவலா ப்ரயோஜநம்’ என்று ஸ்ரீபாஷ்யமிருப்பதும் இங்கு காலக்ஷேபகாலத்திலும் ஸதஸ்ஸுக்களில் நடக்கும் சர்ச்சாப்ரகரணங்களிலும் ஜகத்ஸர்க்கம் வேறு லீலை வேறு என்று கேட்பதும் ஸமாதாநம் சொல்வதும் ஸர்வ ஸ்ரீபாஷ்யாதிகாரி விதிதம். ஸ்ரீபாஷ்யச் சாயையையே யநுஸரித்து பிள்ளைலோகாசார்யர் தமது தத்வத்ரயக்ரந்தத்தில் ‘இதுக்கு ப்ரயோஜநம் கேவலலீலை’ என்றருளிச் செய்திருக்கிறார். இதற்கு ஸ்ரீபாஷ்ய ஸ்ரீஸூக்திக்குப்போலவே ப்ரகாராந்தரேண யோஜநம் ஶக்யமாயிருக்க மாமுனிகள் தமது வ்யாக்யாநத்தில் வேறுவிதமாக ஒரு யோஜநம் செய்தருளுகின்றார் –

‘லீலையாவது தாதாத்விகரஸமொழிய காலாந்தரத்தில் வருவதொரு பலத்தைக் கணிசியாதே பண்ணும் வ்யாபாரமேயாகிலும் ‘இதுக்கு ப்ரயோஜநம்’ என்று ஸ்ருஷ்டிரூப வ்யாபாரத்துக்கு ப்ரயோஜநமாகச் சொல்லுகையாலே தாதாத்விகரஸ மாத்ரத்தைச் சொல்லிற்றாகக் கடவது’

என்று. இந்த வ்யாக்யாந ஸ்ரீஸூக்தியின் கருத்து இன்னதென்று அறிதற்குரிய வாக்ய வ்யுத்பத்தி சிறிதுமில்லாமலிருந்தும் கேவலம் பக்ஷபாதமாத்ரத்தினால் முன்னும்பின்னும் ப்ரபல ஆரவாரம் பண்ணி மாமுனிகளை விபவதசையிலிருந்து கேட்டால் அருவருக்கும்படியான ஆபாஸ ப்ரசம்ஸைகளைச்செய்கின்றனர்.

‘மூல ஸ்ரீஸூக்தி அஸமஞ்ஜஸமாயிருக்கிறது என்பதைத் தம் திருவாக்கினால் வெளியிடக் கூசி’

என்று ‘மூலத்தை மாமுனிகள் அஸமஞ்ஜஸமாக நிச்சயித்துவிட்டார். ஆனால் அதை வெளியிடக் கூசினார்’ என்பது எவ்வளவு அழகான தாத்பர்யவர்ணநம்! யஷ்ருவி தமாவிகளை உபயோகித்து விவரணம்செய்வது வ்யாக்யாநகாரர்களுக்கு இயல்பு. எங்கும் இதைக் காண்கிறோம். பிறருக்கு உண்டாகும் சங்கையை இப்படி அநுவதித்து மூலதாத்பர்யத்தை விளக்குவது உத்தேச்யம். மூலம் அஸமஞ்ஜஸமென்றும் திருத்தி அமைக்கவேணுமென்றும் கருத்து கூறுவதில்லை. இது நிற்க வ்யாக்யாந ஸ்ரீஸூக்தியின் பொருளை இவர்கள் உணரவேணுமே. அதற்கு மேலன்றோ ஸ்துதி, நர்த்தனம் எல்லாம் உசிதம். வ்யாக்யாந ஸ்ரீஸூக்தியின்படி மூலத்தின் பொருள்

‘ஸ்ருஷ்டிவ்யாபாரத்திற்கு ப்ரயோஜநம் தாதாத்விகரஸமாத்ரம்’

என்றதாகிறது. போகத்திலும் தாதாத்விகரஸம் உண்டு. அதை இங்கு வ்யாவர்த்திக்காவிட்டால் அதிப்ரஸங்கம் வரும். வ்யாவர்த்திப்பதானால் லீலாரஸமென்று கூறியே வ்யாவர்த்திக்கவேணும். அப்போது வையதிகரண்யப்ரதீதி ததவஸ்தை. ஆக இப்படி மூலம் போலவே வ்யாக்யாந ஸ்ரீஸூக்தியும் வெகு கம்பீரமாய் அமைந்திருக்கிறதென்பதை உணராதே மூலகாரரையும் நிந்தித்துக்கொண்டு வரம்பு கடந்து புகழ்ந்தது புகழ்ந்தவர்களின் அஜ்ஞத்வகாஷ்டாப்ரகாசந மாத்ரத்தில் முடிகின்றது. இந்த வ்யாக்யாந ஸ்ரீஸூக்தியின் தாதாத்விகார்த்தத்தை இவர்கள சாந்தர்களானபிறகு நாமே விசதீகரிப்போம்.

ஸ்ரீ:

श्री वरवरमुनये नमः

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஸப்பாதகர் ஸ்வாமி ஸந்நிதியில் விஜ்ஞாபநம்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியையில் சென்ற ஐப்பசி மாதத்தில் வைரிவரு திநீவித்ராஸிநீ 4-ல் வெளிவந்த விஷயம் மிகவும் ஸாரமாயும் ப்ராமாணிகர்கள் உகக்கும்படியும் இருந்தது. வைஷ்ணவஸுதர்சனம் என்ற சிறிய பத்ரிகை ''வித்ராஸிநீ விமர்சம்'' என்றாரம்பித்து கடைசியில் பக்கங்களைப்பூர்த்திசெய்து என்னவோ எழுதியிருக்கிறது. கடைசியில் ''வீக்ஷாரண்யக்ஷேத்ரமாஹாத்ம்யத்தைப் படிப்பது'' என்று முடிக்கிறது. தான் முதற்பக்கத்தில் வெளியிட்ட கட்டுக்கதையே அதன் நினைவாகவிருக்கலாம். அது வெறும் கட்டுக்கதை என்பதற்கு 'கிட்டு' என்ற பெயர் வைத்ததே போதுமான காரணம். இப்படி பத்ரிகைத்தொழிலை அருவருக்கத்தக்க முறையில் கட்டுக்கதைகளைக் கட்டி வெளியிட்டு வருவதைக் கண்டு சிலர் ஆத்திரமடையக்கூடும். ஆத்திரமடைந்த சிலர், பிறர் ஸம்ப்ரதாயத்தில், சுங்கச்சாவடியில் சுங்கச்சீட்டு விற்றுவந்து பணத்தை மோசம்செய்து கடனுக்கு பயந்து ஸந்யாஸியாகி பலரைப் பாழ்படுத்தின உண்மையான வரலாறுகளையும் மற்றும் அதுபோல் நாளதுவரையில் உள்ளவர்களைப் பற்றின அருவருக்கத்தக்க உண்மையான சரித்ரங்களையும் எழுதி தங்கள் பத்ரிகையில் ப்ரசுரிக்கும்படி அனுப்பக்கூடும். அவைகள் தங்களுக்குக் கிடைத்திருக்கவும் கூடும். அவைகளைத் தாங்கள் ப்ரசுரிக்காமல் வைஷ்ணவ ஸுதர்சனம் எழுதியதை ஒரு பொருட்டாக மதிக்காமல் இந்தமாதிரியான அஸம்பத்தப்ரலாபங்களுக்கு எவ்விதமான பதிலையும் உயர்ந்த நோக்கமுள்ள தங்களுடைய ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையில் ப்ரசுரிக்காமலிருக்கும்படி க்ருபை செய்தருளும்படி மிகவும் கேட்டுக்கொள்கிறேன்.

.... இங்ஙனம் அடியேன் ராமாநுஜ தாஸன்

1—12—52 ஸ்ரீ க்ருஷ்ணன்.

———

Regd. No. M. 4437.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

நந்தன ஹூ தை மீ-1953 ஹூ ஜனவரி-பிப்ரவரி-மீ

[உத்தராயனம் - ஹேமந்த ருது - மகர மீ]

14—1—53	1உ	புதன்கிழமை	...	மகர க்ருஷ்ண சதுர்தசி திதி; ஸங்க்ராந்தி; திருப்பாவை சாற்றுமுறை. (இன்று ஸங்க்ரமண தர்ப்பணம்.)
15—1—53	2உ	வியாழக்கிழமை	...	● அமாவாஸ்யை; உத்திராடம்; ஸ்ரீஅஹோபிலமடம்42-வது பட்டம் (இஞ்சிமேடு) **ஸ்ரீஸ்ரீரங்கசடகோப யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்;** கநு பாரிவேட்டை.
17—1—53	4உ	சனிக்கிழமை	...	திருவள்ளூர் ஸ்ரீவீரராகவன் ரதோத்ஸவம்.
18—1—53	5உ	ஞாயிற்றுக்கிழமை	...	த்ருதீயை-சதுர்த்தி திதித்வயம்.
21—1—53	8உ	புதன்கிழமை	...	ரதஸப்தமி.
25—1—53	12உ	ஞாயிற்றுக்கிழமை	...	ஸர்வ ஏகாதசி.
26—1—53	13உ	திங்கட்கிழமை	...	ஹரிவாஸரம் 2-57.
29—1—53	16உ	வியாழக்கிழமை	...	சந்த்ரக்ரஹணம்.
31—1—53	18உ	சனிக்கிழமை	...	மகம், திருமழிசைப்பிரான் திருநக்ஷத்ரம்.
2—2—53	20உ	திங்கட்கிழமை	...	சதுர்த்தி திதி.
3—2—53	21உ	செவ்வாய்க்கிழமை	...	பஞ்சமி திதி.
4—2—53	22உ	புதன்கிழமை	...	அதிதி; ஹஸ்தம், ஸ்ரீகூரத்தாழ்வான் திருநக்ஷத்ரம்.
10—2—53	28உ	செவ்வாய்க்கிழமை	...	ஏகாதசி-த்வாதசி திதித்வயம்; ஸர்வ ஏகாதசி.
11—2—53	29உ	புதன்கிழமை	...	மகர க்ருஷ்ண த்ரயோதசி திதி.
12—2—53	மாசி 1உ	வியாழக்கிழமை	...	கும்ப க்ருஷ்ண சதுர்தசி திதி; கும்ப ரவி 4-41. (இன்று ஸங்க்ரமண தர்ப்பணம்)

குறிப்பு:— 1உ (14-1-53) புதன்கிழமை ஸ்ரீரங்கம் பஞ்சாங்கத்தில் போதாயந அமாவாஸ்யை போட்டிருக்கிறார்கள். மற்றவைகளில் 2உ போடப்பட்டிருக்கின்றது.

16உ (29-1-53) வியாழக்கிழமை பௌர்ணமி திதி ச்ராத்தம் செய்யலாம். 17உ வெள்ளிக்கிழமை காலை 7-35 மணிக்குத்தான் க்ரஹணம் விடுகிறபடியால் அன்று ராத்ரி சந்த்ரனைப்பார்த்தபிறகே போஜனம் செய்யவேண்டும். அன்று செய்யவேண்டிய ப்ரதமை திதி ச்ராத்தத்தை மறுநாள் 18உ செய்யவேண்டியது.

Printed by J. Rangachariar, Srikaryam, Sri Ahobilamutt, at Sri Malola press, 30 Panagal Street, Tiruvellore. Edited & Published by P. S. Srinivasa Desikachariar. 2. Audiappa mudali Street, Vepery, Madras-7.